NIRU TUITION CENTRE
KONDAVIL
89 ஈருறுப்பு விரிவு
[Day] ஆக்கிமீடிசின்
கோட்பாடும், மிதப்பு விதியும்
Dec. 28-ல்
89 (E/C) வட்டம்
எறியம்
01 - 01 - 89
90 (E/C) நுண்கணிதம்
காவிகள்
திரு. கிருஸ்ணகுமார்
B. Sc. (Hons)

வாரமுரசொலி
VARAMURASOLI

Chemistry
89 பௌதிக இரசாயனம்
சனி, ஞாயிறு 4 30
90 பொது இரசாயனம்
சனி, ஞாயிறு 3.30
திரு. செல்வா B.Sc (Hons)
90 வெப்ப இரசாயனம்
தை - 1-ல்
NIRU TUITION CENTRE
KONDAVIL

முரசு 3 ஒலி 28 ஞாயிற்றுக்கிழமை 25-12-1988 (மார்கழி 10) ஜ. அவ்வல் 15 விலை ரூபா மூன்று

# ஐக்கிய தேசிய கட்சி அணியில்

# முஸ்லிம் காங்கிரஸ், லிபரல்

## பொதுத்தேர்தலுக்கு முன் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தம் உருவாக்க பேச்சு நடக்கிறது

[கொழும்பு]

புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள திரு. பிரேமதாஸவின் நெருங்கிய முக்கியஸ்தர்களான ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள சிலர், ஜனாப் அஷ்ரபை தலைவராகக் கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடனும், திரு ருக்மன் சேனநாயக்காவை தலைவராகக் கொண்ட லிபரல் கட்சியுடனும் பேச்சுவார்த்தையை ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு வசதியாகவே இப்பேச்சுவார்த்தைகள் நடைபெறுவதாக எமது நிருபர் நேற்றுத் தெரிவித்தார்.

தற்போதைய விகிதாசார தேர்தல், சட்டத்தின் கீழ் அடுத்த பொதுத் தேர்தலில் எந்தவொரு அரசியல் கட்சியும் தனித்துப் போட்டியிட்டு பெரும்பான்மைப் பலத்தைப் பெறமுடியாதென்பதாலேயே, புதிய ஜனாதிபதி பிரேமதாஸ இப்பேச்சுவார்த்தைக்கு முக்கியமளிப்பதாக தெரிய வந்துள்ளது

முஸ்லிம் காங்கிரஸும், லிபரல் கட்சியும் சில வாரங்களுக்கு முன்னர் ஸ்ரீமாவோ

→ 14-ம் பக்கம் பார்க்க

## ஜே.வி. பிக்கு பொது மன்னிப்பு! பிரேமதாஸவின் சிறப்புப் பரிசு

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரேமதாஸ அணிக்கும், ஜே. வி. பி. முக்கியஸ்தர்களுக்குமிடையேயான பேச்சுவார்த்தை எதிர்பார்த்தபலனை அளித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

பேச்சுக்கள் பூரண வெற்றியளிப்பதற்கு வசதியாக ஜே. வி. பி. இயக்கத்துக்கு திரு. பிரேமதாஸ தாம் ஜனாதிபதி என்ற அந்தஸ்தில் பொது மன்னிப்பு வழங்கலாமென்றும் தெரியவந்துள்ளது

அடுத்த வாரத்தில் இது தொடர்பான சில முக்கிய அறிவிப்புகள் வெளிவரலாமென்று விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

## பொதுத் தேர்தலில் ஜே.வி.பி. போட்டியிடும் என்கிறார் லலித்

தீவிரவாத இயக்கமான ஜே. வி. பியினர் வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட முன் வருவார்கள் எனத் தாம் நம்புவதாக பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி தெரிவித்துள்ளார்.

அவசரகாலச் சட்டப் நீக்கப்பட்டதைத் தொடர்ந்து அச்சட்டத்தின் கீழ் கைதான 2400 பேர் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் தெரிவித்த அமைச்சர், ஆயுதப் போராட்டம் நடத்தும் சகலரும் ஜனநாயக வழிக்குத் திரும்பவே அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்

ஜனவரி 15 ஆம் திகதியுடன் காலாவதியாகும் அவசரகாலச் சட்டம் குறித்து உள்ளூர், வெளியூர் செய்தியாளர்களிடம் பேசுகையிலேயே அமைச்சர் மேற்படி தெரிவித்தார்.

அன்பர்கள் அனைவருக்கும்



முரசொலியின் நத்தார் வாழ்த்துக்கள்!

மின்கோபுர சேதங்களைத் திருத்த

## யாழ். மின்பகுதி ஊழியர்கள் மதவாச்சி செல்கின்றனர்

மதவாச்சிக்கு அருகில் சேதமாக்கப்பட்டுள்ள 132 கிலோ வோட்ஸ் மின் கோபுரங்களை திருத்தும் வேலைகள் யாழ் பிராந்திய மின்சாரசபை ஊழியர்களால் மேற்கொள்ளப்படவுள்ளது

இதன்பொருட்டு மின்சார சபை அதிகாரிகள், ஊழியர்கள் ஆறுபேரைக் கொண்ட குழுவொன்று மதவாச்சிக்குச் செல்லவுள்ளது ஹபரணை, அனுராதபுரம் பகுதியில் சேத

→ 14 ஆம் பக்கம் பார்க்க

## சைக்கிள் கள்வர் பிடிபட்டனர் ஒருவர் சடலமாகக் கிடந்தார்

யாழ்ப்பாண நகரில் அண்மைக்காலங்களில் சைக்கிள் திருட்டுக்களில் ஈடுபட்ட இருவர் நேற்று ஸ்ரான்லி வீதியில் வைத்து கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர்.

இவர்கள் சில தினங்களுக்கு முன்பு பெரிய கடையில் திருடிய சைக்கிள் ஒன்றுடன் ஸ்ரான்லி வீதிக்கு வந்தபோது அந்த சைக்கிள் உரிமையாளர் அதனை இனங்கண்டு இவர்களைப்பிடித்தார். விசாரணை

→14 ஆம் பக்கம் பார்க்க

## நகரில் இரு பிடவைக்கடைகள் தீவிபத்தில் முற்றாக எரிந்தன

யாழ்நகரில் இடம்பெற்ற தீவிபத்தொன்றில் இரண்டு பிடவை விற்பனை நிலையங்கள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளன. நேற்று அதிகாலை ஒரு மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

மின்சார நிலையவீதியில் கஸ்தூரியார் வீதிச்சந்திக்கு அருகில் அமைந்துள்ள முர்ஷிதா ரெக்ஸ் ரைல்ஸ், அதற்கு அருகில் அமைந்துள்ள அமீர் ரெசஸ் அன் ரெயிலரிங் ஆகிய இரு கடைகளே இத்தீவிபத்தின்போது சேதமுற்றவையா

→14 ஆம் பக்கம் பார்க்க

## மக்கள் தொண்டர் படையின் 80 பேர் இங்கு நியமனம்

மக்கள் தொண்டர் படையைச் சேர்ந்த எண்பது பேர் யாழ்ப்பாணத்தில் கடமையாற்ற நியமனம் பெற்றுள்ளனர்.

மாகாண அமைச்சு நிர்வாகத்தின் கீழ் சட்டம், ஒழுங்கு நிலைநாட்டல், மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளில் விசேட பயிற்சி அளிக்கப்பட்ட பின்னர் இவர்கள் சேவைக்கென நியமிக்கப்பட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தின் சில பகுதிகளில மக்கள தொண்டர் படை (சிவிலியன் வொலன்டியர் போர்ஸ்) ஏற்கனவே பணிபுரிய ஆரம்பித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## ஈழவர் ஜனநாயக முன்னணி பொதுத்தேர்தலில் போட்டியிடுமா? இந்த வாரம் முடிவு தெரியவரும்

ஈழவர் ஜனநாயக முன்னணி என்ற பெயரில் அரசியல் கட்சியாக மாறியிருக்கும் ஈரோஸ் அமைப்பு, பொதுத்தேர்தலில் போட்டியிடுவதா, இல்லையா என்பதை இந்த வாரத்தில் முடிவெடுக்குமென்று அதன் முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர். புதிய கட்சியை தேர்தல் ஆணையாளர் அங்கீகரித்துள்ளதாக சிலவட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டதாயினும், அதனை ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை. அதேசமயம், ஈழவர் ஜனநாயக முன்னணி நிச்சயமாக தேர்தலில் போட்டியிடுமென்று அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர். இன்றைய சூழ்நிலையில் எதிர்வரும் பொதுத்தேர்தலில் பங்குபற்றுவதில்லையென்றால், ஈரோஸ் அமைப்பு தன்னை ஒரு அரசியல் கட்சியாக மாற்றவேண்டிய தேவை இல்லை என்றும் அதே வட்டாரங்கள் சுட்டிக்காட்டின. எனினும், ஈழவர் ஜனநாயக முன்னணி வட்டாரங்கள் இவ்வாரத்தில் தமது முடிவை உத்தியோக பூர்வமாக வெளியிடுவர்

## சிறு விளம்பரம்

**இறைச்சிக் கோழி**
புறொயிலர் கோழி சேவல், விருத்து சேவல், அடைவைக்கும்முட்டைகோழித் தின் விற்பனைக்குண்டு. சற்குணராஜா&பிறதர்ஸ், பிரப்படி லேன், கொககுவில். 12365

**தேவை**
யாழ்நகரில் வகுப்புகள் நடத்துவதற்கு உகந்த இடம், பாவித்த வாங்கு மேசைகள்தேவை. மே/பா விளம்பர இலக்கம் 228, முரசொலி, யாழ்ப்பாணம் 12454

**விற்பனைக்கு**
பாவித்த ஹொல் செற், ஜிற்றூர், Show Case, கண்ணாடி மேசை, கவுண்டர், Pram, Play Pen, புத்தக அலுமாரி, நேசரி மேசை, Baby cot, Pyrex, கிளாஸ் வகைகள் உடன் விற்பனைக்குண்டு. No. 307, பலாலி ரோட், சென்றல் நேசிங்ஹோம் முன்பாக, திருநெல்வேலி. 12457

**தேவை**
டீசல் அல்லது மண்ணெண்ணெயில் இயங்கக் கூடிய ஜெனரேற்றர் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். Jaffna Technical Institute, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவையருகாமை) யாழ்ப்பாணம் 12408

**இலவசம் கலண்டர்**
மழைக்காலம், ராதையின் நெஞ்சம், பூம்பனிமலர்கள், முடிவல்ல ஆரம்பம், நாவல்களில் ஏதாவது இரண்டு நாவல்களை வாங்கும் முதல் ஆயிரம் வாசகர்களுக்கு இரகுநாதையர் பஞ்சாங்க கலண்டர் 16/- இலவசமாக வழங்கப்படுகிறது. ராஜன் புத்தகசாலை, பஸ் நிலையம், யாழ்ப்பாணம் 12470

**விற்பனைக்கு**
C. B 125 - T கொண்டா எலோவில் மோட்டார் சயிக்கிளும், C - 90 கொண்டா Econd Power மோட்டார் சயிக்கிளும் விற்பனைக்கு. பொ. சிவபாதலிங்கம் No 9, அரசடி ஒழுங்கை, தட்டாதெரு, யாழ்ப்பாணம். 12466

**விற்பனைக்கு**
"பொமனேரியன்" வெள்ளை, பிறவுண் குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- "நாராயணா விறகு மரக்காலை" ஆடியபாதம் வீதி, (நல்லூர் V.C.க்கு அண்மையில்) திருநெல்வேலி. 12461

இறைச்சிக் கோழிகள் (BROILERS) முட்டை சில்லறையாகவும்தொகையாகவும் எமது பண்ணையில் பெற்றுக் கொள்ளலாம். நத்தார் புதுவருட பண்டிகையை முன்னிட்டு வியாபாரிகளுக்கு விசேட சழிவுகள் வழங்கப்படும் அண்ணா பாம் - இணுவில். 12464

**விற்பனைக்கு**
மொத்தமாக கலண்டர், டயறிகள்: மெய்கண்டான் லீலா, அஷ்டலக்சுமி, இரகுநாதையா, திருக்கணித, அன்பளிப்புக்காக வியாபார நிறுவனங்கள் பெயர் அச்சிடும் கலண்டர், டயறிகள் பலடிசைன்களிலும் பல அளவுகளிலும் விற்பனைக்குண்டு வியாபாரிகட்கும் அன்பளிப்பு வழங்குவோருக்கும் விசேட கழிவு மக்மிலன் புத்தகசாலை, இல 3, பஸ் நிலையம் ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் 12383


# கம்பியூட்டர் கல்வி

## Diploma in Computer Programming

## BASIC

**4 Months - Weekdays**

**Practicals on World famous Commodore Computers**

Fees: மாதம் 250/- மட்டுமே!

பெறுமதிவாய்ந்த சான்றிதழ் வழங்கப்படும்

**ஆரம்பம்: 28-12-88**

C. I. M. A, I. D. P. M, I. A. B.
Hotel Management
வகுப்புகளும் நடைபெறுகின்றன

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Leaders in Computer Education)
16, 3ஆம் குறுக்கு வீதி,
(OLR தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.
12402

# மலைக்கோட்டை ரவல்ஸ்

நம்பிக்கை, நாணயம், துரிதசேவை

## ஜேர்மன் பயணம்

வெளிநாட்டு பயண அமைப்பாளர்
பொ. சிவபாதலிங்கம்
No 9 அரசடிஒழுங்கை, தட்டாதெரு
யாழ்ப்பாணம்
12469

## G. C. E. (O/L) - 1989

**கணிதமும், ஆங்கிலமும்**

சனி, ஞாயிறு வகுப்புகள் தனியான கவனிப்பு மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்களே சேர்த்துக்கொள்ளப்படுவர். ஆர்வமுள்ளோர் மட்டும் 05-01-89க்கு முன் பதிவு செய்து கொள்ளவும்.

கட்டணம் ( for 10 hrs. ) 40/- மட்டும்
43, றக்கா வீதி, யாழ்ப்பாணம்.
12448


## ஓராண்டு நினைவஞ்சலி



**திருமதி தயாபரம் பெனடிக்ற் இராசதுரை**

பிறப்பு: 12. 1. 1924 இறப்பு: 25. 12. 1987

பாலன் யேசு அவதரித்த பரிசுத்த நன்னாளிற்
சீலமிகுங் கர்த்தர் திருவடியில் ஓய்வுற்றீர்!
காலமோர் ஆண்டு கடந்தாலும் உங்களது
கோலம் மனத்திரையிற் கொலுவிருக்கும் என்நாளும்!

பரம பிதாவுக்குள் உங்கள் ஆன்மா
சாந்திபெறப் பிரார்த்திக்கும்.

நுகவில்
கரவெட்டி.

மக்கள், மருமக்கள்
தம்பி, மைத்துனி, பேரப்பிள்ளைகள்.
12463


வாடிக்கையாளர்களுக்கு
V. K. R. ஸ்தாபனத்தாரின் உளம் கனிந்த
**நத்தார் புதுவருட வாழ்த்துக்கள்!**
விற்பனை முகவர்கள்
நெஷனல் தயாரிப்புகள்

# LML Vespa T5

ஸ்கூட்டர்

V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
12439

எமது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் நத்தார் வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ் நகரில் **"MILLERS"**
(Printing & Processing)

**கலர்படச் சுருள் கழுவுதல் சேவை**

★ 3 முதல் 5 நாட்களுக்குள் விநியோகம்
★ கலர் படச் சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்
★ கலர் பிரதி ஒன்றுக்கு **4/50** மட்டுமே

நாடுங்கள்

# சென்றல் கிளினிக்

193A, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
12442

வார முரசொலி

# யேசுநாதர் பிறந்த நகரில்

# கிறிஸ்மஸ் விழாக்கள் இல்லை

பலஸ்தீனத்தில் பெத்தலஹேம் என்ற ஊரில் மாட்டுத் தொழுவத்தில் இயேசுநாதர் பிறந்த டிசம்பர் இருபத்தைந்தாந் திகதி உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்களால் கிறிஸ்மஸ் பண்டிகை கொண்டாடப்படுகின்றது.

இயேசுநாதர் பிறந்த பெத்தலஹேம் நகரில் இவ்வாண்டு கிறிஸ்மஸ் கொண்டாட்டங்கள் ரத்துச் செல்யப்பட்டுள்ளன. இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிரான பலஸ்தீன எழுச்சிகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அங்கு நடைபெறும் சகல உத்தியோக பூர்வமான கொண்டாட்டங்களும் ரத்து செய்யப்பட்டுள்ளன. இஸ்ரேலிய பலஸ்தீனப் பிரமுகர்களுக்கு கிறிஸ்மஸ்சை முன்விட்டு அளிக்கப்படும் வரவேற்பு உபசாரங்கள், வருடாந்த சாரணர் அணிவகுப்பு ஆகியனவும் ரத்துச் செய்யப்பட்டுள்ளன.

மெஞ்சர் சதுக்கத்தில்வர்ண ஒளி அலங்காரங்கள் இல்லை. சதுக்கத்தில் உள்ள பன்னிரண்டு மீற்றர் கிறிஸ்மஸ் மரம் வெறுமையாகக் காட்சியளிக்கின்றது. தேவாலயத்தில் வழக்கம் போல் பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன.

சென்ற ஆண்டு கிறிஸ்மஸ் பண்டிகையின் போது பலஸ்தீன எழுச்சி இடம் பெற்றிருந்த போதும் மெஞ்சர் சதுக்கம் ஒளி விளக்குகளால் ஒளி வீசியது ஆனல் வைபவங்கள் அனைத்தையும் மேயர் எலியாஸ் பிரெய்ஜ் ரத்து செய்திருந்தார்.

எங்கள் மக்கள் பலர் கொல்லப்பட்டும் சிறைகளில் வாடிக்கொண்டும் இருக்கும்போது எப்படி கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாட முடியும். எமது மக்களின் கவலைகளுடன் பங்கு கொள்வதற்காகவே கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களை ரத்துச் செய்துள்ளோம் என பெத்தலஹேம் உதவி மேயர் ஹனு நிஸான் பத்திரிகை நிருபர்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

## ரஷ்யாவில் கிறிஸ்மஸ்

சோவியத் தலைவர் கொர்பச்சேவ் அவர்களின் மறுமலர்ச்சித் திட்டமான 'பெரஸ்த்ரொய்காவை' சோவியத் 'பால்டிக்' குடியரசான லிந்துவேனியாவில் அமுல்படுத்தும் திட்டத்திற்கமைய முதற் தடவையாக அந்த மாநில தொலைக்காட்சியில் கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன. முதல் முறையாக இம்முறையே தொலைக்காட்சியில் கிறிஸ்மஸ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன.

இத்தினத்தை உத்தியோக பூர்வமான விடுமுறை தினமாக லிந்துவேனியா பிரகடனப்படுத்தியுள்ளது பெரஸ்த்ரொய்கா மதச் சுதந்திரத்தை கூடுதலாக வழங்கியுள்ளது. இதனுல் பரந்த அளவில் மதச் சடங்குகளை இப்போது மேற்கொள்ள முடிகின்றது என வணக்கத்திற்குரிய பாதிரியார் கர்திஞல் வின்சென்டாஸ் லிலாத்கேய் வாயாஸ் தெரிவித்துள்ளார்.

## கிறிஸ்மஸ் கேக் ஐயோ வேண்டாம்!

லண்டனில் கிறிஸ்மஸ் பண்டிகை வந்துவிட்டால் சொல்லத் தேவையில்லை. சிறுவர் முதல் முதியவர் வரை எல்லோரும் குதூகலத்துடன் நகரில் உள்ள கடைகளுக்கு படையெடுத்து தங்களுக்குத் தேவையான பொருட்களை வாங்க முந்திக் கொள்வார்கள். கிறிஸ்மஸ் பண்டிகைக்கென்றே தயாரிக்கப்பட்ட பொருட்கள் சந்தைக்கு வந்து விடுகின்றன. லண்டன் நகரம் மக்கள் வெள்ளத்தால் நிரம்பி விடும். கிறிஸ்மஸ் பண்டிகைக்கென்று தயாரிக்கப்பட்ட முகமூடிகளை வாங்க சிறுவர்கள் போட்டி. மறுபுறம் உணவுப் பொருட்களை வாங்க தாய் தந்தையர் போட்டி.

இம்முறை லண்டன் நகர மக்களால் கிறிஸ்மஸ் கேக் தயாரிக்க முடியவில்லை. சுகாதார அமைச்சர் எட்வீனுகரி அம்மையார் முட்டைகள் எல்லாம் ஒருவித கிருமித் தொற்றுல் பாதிககப்பட்டிருக்கின்றன. முட்டைகளை வாங்குவதில் மக்களை எச்சரிக்கையாக இருக்கும் படி அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து பிரிட்டிஷ் மக்கள் முட்டைகளை வாங்குவதை நிறுத்திவிட்டார்கள். இதனுல் கோழிப் பண்ணையாளர்கள் ஆத்திரமடைந்து நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்கள் நோய் தொற்றுமலே கோழிகளை அழித்தொழிக்க வேண்டிய நிலை இப்போது ஏற்பட்டிருக்கின்றது. எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பைத் தொடர்ந்து சுகாதார அமைச்சர் தமது பதவியை இராஜினுமாச் செய்துள்ளார்.

கடும் அவியலாக முட்டையைச் சாப்பிட்டால் கிருமிகள் ஒன்றும் செய்யமாட்டாது என்று வைத்தியர்கள் அறிவித்திருந்தும் மக்கள் முட்டையின் பக்கமே செல்லவில்லை. இதனுல் கோழிப் பண்ணையாளர்களுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. அரசு அவர்களுக்கு நஷ்ட ஈடு கொடுக்க முன்வந்துள்ளது.

கடைகளில் விற்கப்படும் கிறிஸ்மஸ் கேக் வகைகளை வாங்குவதற்கு மக்கள் பயப்படுகின்றார்கள். கிறிஸ்மஸ் கேக் விற்பனையும் பாதிக்கப்பட்டுள்ளது.

முட்டை இல்லா கிறிஸ்மஸ் கேக்கை மக்கள் தயாரிக்கின்றார்கள். இதுபற்றி பி. பி. சி. நிருபர் லண்டன் மக்களில் சிலரை பேட்டி கண்டார். முட்டையில்லா கிறிஸ்மஸ் கேக் எப்படி இருக்கும்? சுவையாக இருக்குமா? என்று கேட்டபோது ஒருவர் அதனை கிறிஸ்மஸ் கேக்என்று அழைக்க முடியாது. கிறிஸ்மஸ் 'கேக் பாண்' என்றுதான் அழைக்க வேண்டும் என்றார். இன்னொருவரிடம் கேட்டபோது கிறிஸ்மஸ் பண்டிகையை சுவையூட்டுவதே கிறிஸ்மஸ் கேக்தான். முட்டை சேர்த்தால்தான் கேக் சுவையாக இருக்கும். முட்டையில்லாக் கேக்கை கேக் என்று சொல்ல முடியாது என்று வேதனையுடன் கூறினர்

இன்று பிரிட்டனில் கிறிஸ்மஸ் பண்டிகையின் போது சைவம் மேலோங்கி நிற்கின்றது.

## நன்றி மறவா கிறிஸ்மஸ் மரம்

லண்டன் மாநகரின் புகழ் பெற்ற ரஷான்' சதுக்கத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு கிறிஸ்மஸ் மரம் வைக்கப்பட்டு வணங்கப்பட்டு வருகின்றது. இந்த கிறிஸ்மஸ் மரத்தினை நோர்வே அனுப்பி வைக்கின்றது.

இரண்டாம் உலகப் போரின் போது பிரிட்டன் நோர்வேக்கு உறுதுணையாக நின்று உதவியதற்கு நன்றிக்கடனுக 1946-ம் ஆண்டிலிருந்து நோர்வே நாட்டு மக்கள் இந்த கிறிஸ்மஸ் மரத்தினை ஆண்டுதோறும் பிரிட்டிஷ் மக்களுக்கு அனுப்பி வருகின்றார்கள்.

முன்னைய காலங்களில் கிறிஸ்மஸ் மரம் மெழுகுவர்த்தியினுல் அலங்கரிக்கப்பட்டு வந்தன. ஆனுல் நோர்வே வழங்கிய இந்தக் கிறிஸ்மஸ் மரம் மின்விளக்குகளால் மட்டுமே அலங்கரிக்கப் பட்டுள்ளது 65 அடி உயரமான இந்த கிறிஸ்மஸ் மரத்தில் 650 மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன

நோர்வே நாட்டின் குளிர் கால வேளையில் அபரிமிதமாகப் பனிமழை கொட்டும் வெள்ளைக்கம்பளம் விரித்தது போல் கொள்ளை அழகுடன் மிளிரும். பனிப்படலத்தில் தகனத்துடன் சங்கமிக்கும் மெழுகுவர்த்திதனை நினைவு கூரும் விதத்தில் மின்விளக்குகள் இந்தக் கிறிஸ்மஸ் மரத்தினை வடிவமைக்கின்றன.

நோர்வே மக்கள் பிரிட்டிஷ் மக்களுக்கு வழங்கும் இந்த கிறிஸ்மஸ் மரம் நன்றி மறவாத் தன்மைக்கு சிறந்ததொரு எடுத்துக் காட்டாகும். நன்றி உணர்வினை உணர்த்தும் இவ்விழா நோர்வே-பிரிட்டன் மக்களைப் பொறுத்தவரையில் பெரும் விழாத்தான்.

## கிறிஸ்மஸ் தாத்தா

கிறிஸ்மஸ் என்றாலே குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் நினைவில் வந்து மகிழச் செய்வது. நரைத்த தாடியும் கம்பளியி

...13ஆம் பக்கம் பார்க்க

தி.என்.எஸ்.உதயசந்திரன்

# செயற்கரிய செய்தோர்

## காரிக்கண்ணனார்

பாண்டியன் நன்மாறன் என்ற அரசன் பகை அரசனுடன் போருக்குப் புறப்பட ஆயத்தமானுன். அவ்வேளை அவனைக் காணக் காரிக்கண்ணனுர் என்னும் புலவர் சென்ருர், அவனுடைய போர் வன்மையை அவர் நன்கு அறிவார்.

பாண்டியன் நன்மாறன் போரிடத் தொடங்கினுல் உயிர்ச் சேதம் பெரும் அளவில் ஏற்படும். பகைவர் நாட்டுவயல்கள் சேதமாகும். ஊர்கள் தீக்கிரையாகும். காவல்மரங்கள் வெட்டப்படும். அத்தகைய அழிவுகளை எண்ணிய காரிக்கண்ணனுர் பாண்டியன் நன்மாறனின் சினத்தையாற்றி அவனுக்கும், பகை அரசனுக்கும் சமாதானம் ஏற்படச் செய்தால் அழிவுகளைத் தடுககலாமே என்று எண்ணினுர். அவர் கருணை உள்ளம் அப்படி எல்லாம் எண்ணியது.

அரசனைப் பார்த்தார். அரசே ''உனக்கு ஒன்று சொல்லவேண்டி இருக்கிறது. அது என்னவென்ருல் நீ நின் பகைவர் நாட்டைப் போரில் வெற்றி கொள்ளும் போது நின் வீரர்கள் பகைவர் நாட்டு வயல்களைக் கொள்ளை கொள்ளினும் கொள்ளட்டும், பகைவர் ஊர்களைத் தீக்கிரையாக்கினும் ஆக்குக; நின் வேல் அப்பகைவரை அழிப்பினும் அழிப்பதாக; அவர்களுடைய காவல் மரங்களை மட்டும் வெட்டி விடாதே. ஏனென்ருல் அவை உன் யானைகளுக்குக் கட்டுத்தறியாகும் வலிமை உடையன வல்ல' என்ருர்.

காவல் மரத்தை வெட்டாமல் போரில் வெற்றி பெறுதல் இயலாது. எனவே போரைத்தவிர்த்துப் பகை அரசருக்கு அருள்புரிந்து சமாதானம் மேற்கொள் என்பது பொருளாகும்.

அரசனின் கொடையையும், வீரத்தையும் மட்டும் புகழ்ந்து பாடுவதோடு அமையாதுஅரசனுக்கு அறிவுரை கூறவேண்டிய இடத்துக் கூறிப் பகைவர் நாட்டைக் காத்துப் பல வீரர்களின் அழிவையும் தடுத்த காரிக்கண்ணனுர் செயற்கரும் செயல்புரிந்த சான்ேருராவார்.

## தரிசனம்

உலகெலாம் பரந்து வாழும் கிறிஸ்தவ மக்களின் மகிழ்ச்சித் திருநாள் இன்று.

வருடமொருமுறை வரும் கிறிஸ்மஸ் தினத்தை கிறிஸ்தவ மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்திருப்பர். வாழ்க்கையில் ஏற்படும் துன்பங்கள் இன்னல்கள், சுமைகளையெல்லாம் மறந்து மகிழ்வுற்றிருக்க கிறிஸ்மஸ் நாளைவழிமேல் விழிவைத்துக் காத்திருப்பது வழக்கம்.

பாவத்தை மன்னிக்க பாலகன் யேசு பாரினில் அவதரித்த புனித நாளே கிறிஸ்மஸ்.

பூவுலக ரட்சகராம் தேவன் யேசுபிரான் பெத்தலஹேம் நகரில், மாட்டுத் தொழுவத்தில் உதித்திட்ட இந்நாளை கிறிஸ்தவ மக்கள் மட்டுமன்றி அனைத்து மக்களுமே புனித நாளாக கொண்டாடி வருகின்றனர்.

மதங்கள் மனிதர்களைப் பிரித்து வைத்த காலம் மலையேறிவிட்டது. பிறப்பினுல் நாம் ஒரு மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், வளர்ப்பினுல் ''எம்மதமும் சம்மதமே'',''ஒன்றே குலம்-ஒருவனே தேவன்'' என்ற அடிப்படைக்கு மனித வர்க்கம் இன்று மாறிக் கொண்டிருக்கின்றது.

புனித அந்தோனியார் தேவாலயங்களுக்கு நேர்த்திக்கடன் வைத்து வழிபாடு செய்யும் இந்துககள் பல்லாயிரம் பேர்.

அன்னை வேளாங்கன்னியை தாய்த்தெய்வமாக போற்றி வழிபடுபவர்கள் கிறிஸ்தவர்கள் மட்டும் தான் என்று கூற முடியாது.

கொழும்புக்கு வீதிவழியாக பயணஞ் செய்பவர்கள் வழியில் முறிகண்டி பிள்ளையாரை தரிசிக்காமல் செல்வதில்லை.

நெருக்கடிகளும், தொல்லைகளும் அதிகரிக்கும் போதேஆண்டவனை நாம் நெருங்கி நெருங்கிச் செல்கின்ேறும்.

இந்த வகையில் இப்போது கிறிஸ்மஸ் பண்டிகை, தமிழர்கள் அனைவருக்குமே உரியதாகியுள்ளது.

பாவங்களை மன்னிக்க பாரினில் அவதரித்த யேசுபிரான், என்றும் எங்கள் ரட்சகராக இருப்பாராக!

கோடிகோடி துன்பங்கள் நேரினும் தேவன் என்றும் எமக்குத் துணையாக இருப்பாராக!

எங்களுக்காக உதித்த மீட்பர், என்றும எம்மை துயரக்கடலிலிருந்து மீட்பவராக இருக்க பிரார்த்திப்போமாக!

எஸ். திருச்செல்வம்
பிரதம ஆசிரியர்
முரசொலி / வாரமுரசொலி

# எந்த முகம் உங்கள் முகம்?

உங்கள் முகம் எந்த வடிவத்தில் இருக்கின்றது உங்கள் முக வடிவத்துக்குத் தக்க குணாதிசயங்கள். இதோ!

**நீண்ட முகம்:** நீண்ட முகத்தோடு தோற்றம் அளிப்பவர்கள் அதிகம் புத்திசாலிகளாக இருப்பார்கள் ஆனால், பொது அறிவு இவர்களிடமிருக்காது, கற்பனைத்திறன் உள்ளவர்கள், கதை விடுவதில் விருப்பம் உடையவர்கள்.

**நீண்ட வட்ட முகம்:-** இவர்கள் ஞானமுள்ளவர்கள், எப்பொழுதும் சிந்தனை செய்து கொண்டே இருப்பார்கள், சிறந்த சாமர்த்தியசாலிகள்.

**நீண்ட சதுர முகம்:-** நீண்ட சதுர முகத்தைக் கொண்டவர்கள் எந்தக் காரியத்திலும் உறுதியுடன் இருப்பார்கள், ஒரு காரியத்தை எடுத்தால் முடிக்காமல் விட மாட்டார்கள் பின் வாங்கவும் மாட்டார்கள்.

**முக்கோண முகம்:-** இந்த முக்கோண முகத்தைக் கொண்டவர்கள், எந்தக் காரியத்திலும் துணிச்சலாக இறங்குவார்கள். பிரயாணம் செய்வதை அதிகமாக விரும்புவார்கள்.

**சதுரமுகம்:-** அதிக சக்தி கொண்டவர்கள் இவர்கள் குடும்பம் நடத்துவதில் மிகவும் திறமைசாலிகள், குடும்பத்தை அன்புடன் நடத்திச் செல்வார்கள். குழந்தை குட்டிகளுக்குப்பஞ்சமில்லை.

**வட்டமுகம்:-** எப்பொழுதும் சந்தோஷமாக இருப்பார்கள். நல்ல திடகாத்திரம் நிறைந்தவர்கள். இவர்கள் நல்ல வசதிகளுடனும் தம் வாழ்க்கையை நடத்துவார்கள். நீண்ட நாட்கள் உயிர் வாழ்வார்கள்.

**எஸ். கே. கேதீஸ்வரி**



# தெரிந்து கொள்ளுங்கள்

✱ நமக்கு உறக்கம் எப்பொழுது வருகிறது?

நாம் தினமும் நித்திரை கொள்கிறோம். இதற்குக் காரணம் யாதெனில் உடலுக்குத் தேவையான சர்க்கரை, உயிர்வாயு என்பன குறைந்தபோதே வருகிறது. மூளை அருகிலுள்ள நரம்புத்தொகுதியொன்றே நம்மை உறக்கத்தில் ஆழ்த்துகிறது.

✱ பெண்களைவிட ஆண்கள் எரிந்து விழுவது ஏன்?

ஆண்களுக்குரிய உட்சுரப்பியான டெச்டோச்டிரோன் பெண்களுக்குக் குறைவாக இருக்கின்றது. இச் சுரப்பியானது நெருக்கமான சூழ்நிலை வரும் போதோ அல்லது உணர்ச்சி வசப்பட நேரும் போதோ இரத்தக் குழாய்களை இறுக்கிக் கொண்டு இரத்த அழுத்தத்தினை அதிகரிக்கச் செய்கிறது இதனாலேயே ஆண்கள் எரிந்து விழ வேண்டி நேரிடுகிறது. அதோடு அதிகம் அழுவதனாலும் இரத்த அழுத்தம் குறைகிறது. ஆண்கள் அழுவதற்கு விரும்பாததாலும் பெண்கள் அழுதே தம் பிரச்சனையைத் தீர்ப்பதாலும் பெண்களுக்கு எரிந்துவிழவேண்டிய நிலைமை ஏற்படுவதில்லை.

✱ பொதுவாக மனிதர்கள் 100 வயதுக்கு மேல் வாழ்வதில்லை. இதற்குக் காரணம் என்ன?

மனிதர்களில் 30 வயதுக்குப் பின்னர் உடல் அமைப்பின் இயக்கம் 100/1 பங்கு படிப்படியாகக் குறைகிறது. இதன் அடிப்படையில் 120 வயதுக்குப் பின் உடலின் இயக்கம் நின்று விடும். இதனாலேயே மனிதர்கள் 100 வருடத்திற்கு மேல் வாழ்வதில்லை.

★ ஆர். ஜெயதேவி

# 'நியூகிலியர்' யுத்தம் வந்தால் உலகுக்கு என்ன நடக்கும்?

**1945** ஆகஸ்ட் 6-இல் ஜப்பானிய நகரங்களான ஹிரோஷிமா, நாகசாகி மீது அமெரிக்கர்கள் அணுக் குண்டுகளைப் போட்டனர். இதனால் 300 ஆயிரம் மக்கள் மாண்டனர். அன்றிலிருந்து உலகம் அணுயுத்த அச்சுறுத்தலின் கீழேயே வாழ்ந்து வருகிறது.

இன்றுள்ள நவீன நியூக்கிலியர் குண்டுகள் உபயோகிக்கப்பட்டால் என்ன நடக்கும் என்பதற்கான விடையை கண்டறிய சோ. சோ. கு. ஒ. வின் விஞ்ஞானப் பேரவையின் கம்பியூட்டர் நிலைய ஊழியர்கள் விசேஷ கணிப்புகளைச் செய்தனர்.

இந்த ஆய்வின் பெறுபேறுகள் அதிர்ச்சியூட்டுவனவாக உள்ளன. நியூக்கிலியர் மோதுதல் 'நியூக்கிலியர் இரவு' என இப்போது அழைக்கப்படும் நிலையை உருவாக்கும். நியூக்கிலியர் குண்டு வெடிப்பிலிருந்து கிளம்பும் தடித்த புகை மூட்டங்கள் வளிமண்டலத்தில் பரவி சூரியனை மறைத்து பூமியைக் காரிருளில் மூழ்கடித்து விடும். இது குண்டுகள் எங்கு எப்போது வெடித்தன என்ற பாகுபாடின்றி 'நியூக்கிலியர் மாரி'யினால் பின் தொடரப்படும் நியூக்கிலியர் யுத்தம் வெடித்த ஒரு மாதத்தினுள்ளே வளி மண்டலத்தின் சீதோஷ்ண நிலை 15.20 டிகிரிகளால் வீழ்ச்சியுறும். இதன் பயனாக நீர் ஊற்றுக்கள் உறைந்து விடும். எல்லா உயிரினச் சூழல் நிகழ்வுகளும் நின்று விடும். அறுவடை சர்வ நாசமாகும்.

சமுத்திரத்திலுள்ள உயிரினங்களும் இதே நிலைக்கே முகம் கொடுக்கும். சூரிய ஒளி இல்லாததால் சமுத்திரத்தில் ஜீவிதத்திற்கான அடிப்படை அழிந்து விடும். ஐரோப்பாவிலும் ஆசியாவிலும் அமெரிக்காவிலுமுள்ள பிரதான நகரங்களைச் சுட்டெரிக்க 100 150 மெகாதொன் நியூக்கிலியர் எரிபொருள் போதுமானதாகும். அமெரிக்காவின் முதலாவது நியூக்கிலியர் நீர்மூழ்கிக் கப்பல் மட்டும் 100 மெகாதொன் நியூக்கிலியர் எரிபொருளை எடுத்துச் செல்கிறது வேறு வார்த்தையில் ஒரு நியூக்லியர் நீர் மூழ்கிக் கப்பலிலுள்ள ஆயுதங்களை கொண்டே இந்த வையத்தின் உயிரினங்கள் அனைத்தையும் அழித்தொழித்து விடமுடியும்.

ஐக்கிய அமெரிக்காவிலுள்ள தேசிய சீதோஷ்ண நிலையம் நடத்திய ஆய்விலும் இதே தகவல்கள் பெறப்பட்டுள்ளன. நியூக்கிலியர் யுத்தம் வெடித்தால் அதன் விளைவு உலகம் நிரந்தர உறக்கத்தில் – நிரந்தர இரவில் மூழ்கி விடும் என்பதே.

தொகுப்பு:
கதிர் மாணிக்கம்

# மரியாளாம் பூச்சுரந்த....

கானலைத்தான் பாலாறாய்க் கருதி வீழ்ந்த
குருட்டறிவு மானிடர்தம் குற்றந் தீர்க்கத்
தேனருவி பொங்குமழைத் தூறல் போலத்
தவழ்ந்திங்குன் கருணையலை தினமும் பாய
வானகத்தோர் பண்ணிசைக்க வையம் யாவும்
வாழ்த்தொலிக்க மையிருட்டில் விண்ணிற் தொங்கும்
மீனென்று சோதிவீச மீட்ப ரென்று
மரியாளாம் பூச்சுரந்த மதுரத் தேனே!

★ ★ ★ ★ ★ ★ ★

வஞ்சம்பொய் சூதென்றும் விலங்கே நாண
வளரும்போர் வெறியென்றும் வேர றுக்கும்
நஞ்சுகளத் தனைக்குள்ளும் நலிந்து வாடி
நல்லாயன் துணைதேடி நாம லைந்தோம்
செஞ்சொல்லி னமுதகவி சூடி யின்று
சமாதானத் தூதேந்திச் செகத்தில் வந்தோய்!
அஞ்சலித்தோம் வாழ் வூற்றே! அருளைத் தந்துன்
அன்புநிழல் விரித்தெம்மை ஆளு மையா.

பாஷையூர் மு. சிங்கராயர்

வைத்திய கலசம்

# பேன் தொல்லையை நீக்குங்கள்

**டாக்டர் எம். கே. முருகானந்தன் M. B. B. S. (Cey)**

✱ பெரும்பாலும் பள்ளிச் சிறுவர்களைப் பீடிக்கும் பேன்கள், எந்த வயதினரையும், எந்த அந்தஸ்தினரையும் பீடிக்கலாம். எனவே இதையிட்டு வெட்கப்படவோ, மறைத்து வைக்கவோ வேண்டியதில்லை. உடனடியாக வைத்தியம் செய்து பேன் தொல்லையிலிருந்து விடுபடுங்கள்.

★ அடிக்கடி கழுவிச் சுத்தம் செய்யாத, அடிக்கடி வாராத, அடர்ந்த முடியினுள் பேன்கள் விரைவில் பெருகும். ஆனால் எண்ணைப்பற்றோ, சொடுகோ, அழுக்கோ இல்லாத சுத்தமான தலை முடியையே பேன்கள் விரும்புகின்றன என்று சொல்லப்படுகிறது. எனினும் அடிக்கடி கழுவிச் சுத்தப்படுத்தப்படும் தலையில் அவை தொற்றினாலும் பெருகுவது கஷ்டம்.

✱ பேன் தொற்றினாலும் அவை ஆரம்பத்தில் எவ்வித அறிகுறிகளையோ, துன்பங்களையோ கொடுக்காது. முடியின் அடியில் பளபளக்கும் பளுப்பு நிறத்துடன் இறுக்கமாக ஒட்டியிருக்கும் ஈர்களைக் கொண்டே பல தருணங்களில் முதலில் பேன் இருப்பதை அறியக் கூடியதாயிருக்கும்.

★ பேன்கள் தலையில் உள்ள சருமத்தைக் கடித்து இரத்தத்தை உறிஞ்சுவதாலேயே உயிர் வாழ்கின்றன. பேன்கள் அதிகரிக்க, அவற்றின் அதிகரித்த கடியினால் தலையில் அரிப்பு ஏற்படும். அரிப்பைச் சமாளிக்கத் தலையை அடிக்கடி நகத்தினால் சொறிவதனால் வேறு கிருமிகளும் தொற்றி தலையில் சிறு சிறு புண்கள் உண்டாகும்.

★ இதையும் அலட்சியப் படுத்தினால் புண்கள் பெருகும். கழுத்தில் நெறிகள் தோன்றும். நெறிகள் கடும் வாதையையும், காய்ச்சலையும் உண்டாக்கும்.

★ உங்கள் குழந்தைகளுக்குப் பேன் இருக்கிறதா என்பதை அடிக்கடி கவனித்துக் கொள்ளுங்கள். குடும்பத்தில் ஒருவருக்குப் பேன் இருந்தால் மற்றவர்களுக்கும் விரைவில் தொற்றலாம். பேன் உள்ள குழந்தைகளை மற்றவர்களுடன் சேர்ந்து தூங்க விடாதீர்கள்.

✱ பேன் தொற்றுவதைத் தடுப்பதற்குத் தற் சுகாதாரம் முக்கியம். அடிக்கடி முழுகி தலைமுடியைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். தினமும் தலையணை, படுக்கை, விரிப்பு ஆகியவற்றை வெய்யிலில் காயப் போடுங்கள். அவற்றை அடிக்கடி துவையுங்கள்.

✱ மற்றவர்களுடைய சீப்பு, பிரஷ், துவாய் ஆகியவற்றை உபயோகிப்பதன் மூலம் பேன் உங்களுக்கும் தொற்றலாம் எனவே இவற்றை உங்களுக்கு என்று பிரத்தியேகமாக வைத்திருங்கள். குழந்தைகளுக்கும், சிறு வயதிலிருந்தே தனித்தனிப் பொருட்களை உபயோகிக்கப் பழக்கப்படுத்துங்கள்.

✱ பேன் தொற்றினால் உடனடியாக வைத்தியம் செய்து, அதன் தொல்லையை நீக்குங்கள். பலவகை மருந்துகளும், மருந்து சேர்க்கப்பட்ட ஷாப்புகளும் உபயோகப் படுத்தப் படுகின்றன.

✱ காமா பென்ஸீன் ஹெக்சாக குளோரைட் (gamma benzene hexachloride) என்ற மருந்து இலங்கையில் பரவலாகப் பாவிக்கப்படுகிறது. சொறிசிரங்கிற்கும் (Scahies) இம்மருந்து உபயோகிக்கப் படுவதை முன்னரே அறிந்திருப்பீர்கள் இது கெமெக்சேன் (Chemaxane), காப்(Gab), எம்ஸ்கப் (Emscab) போன்ற பல்வேறு வர்த்தகப் பெயர்களில் மருந்துக் கடைகளில் சுலபமாக கிடைக்கிறது.

✱ இத்திரவ மருந்துகளில் ஒன்றை இரவில் தலைமுழுவதும் நன்றாகப் பூசவேண்டும். 12 முதல் 24 மணித்தியாலயம் வரை அப்படியே விட்டுவிட்டு மறு நாள் தலைக்கு முழுகுங்கள். பேன்கள் தொலைந்து விடும். வேண்டுமாயின் ஒரு வாரத்தின் பின் மீண்டும் மருந்திடுங்கள்.

✱ நம் நாட்டில் நுளம்பிற்கு எதிராக உபயோகிக்கப் படுத்தப்படும் மலத்தியோன் (Malathion) மருந்து, இப்பொழுது பேன்களுக்கு எதிராக வெற்றிகரமாக கொடுக்கப்படுகிறது. மிகவும் குறைந்த செறிவுள்ள (0 5%) திரவ மருந்துகளாக இவை தயாரிக்கப்பட்டே பேன்களுக்கு எதிராக மேல்நாடுகளில் பயன்படுத்தப்படுகிறது இங்கு கிடைக்கும் மலத்தியோன் பவுடரை அப்படியே உபயோகித்தால் அது நஞ்சாகலாம் கார்பரில் (Carbaryl) என்ற மருந்தும் இப்பொழுது பயன் படுத்தப்படுகிறது.

✱ பேன்களைக் கொல்ல தலைமுடியில் பூசப்படும் இம்மருந்துகள் யாவையும் கண்களில் படாமல் பாதுகாப்பது அவசியம்.

# இரவில் உதித்த சூரியன்

வாகரை வாணன்

இயேசு பாலனே!
இரவில் உதித்த
சூரியன் நீ!
உன் வரவை உரைக்க
ஒரு நட்சத்திரம்
வானில்
உலா வந்தது
அந்த ஞானியர்
மூவரைத் தவிர
ஆருக்கும்
அதன் தரிசனம்
கிடைக்கவில்லை.

அந்தகச் சனங்கள்
அந்தகர் மட்டுமா?
செவிடரும் கூட......!

அந்தரத்தில் வாழும்
ஆயிழையர்
சுந்தரன்
உன் பிறப்பைச்
சொன்ன போது
விந்தைச் சனங்கள்
விழிக்கவேயில்லை.

சக்கரவர்த்தி
வம்சம் நீ .....
சத்திரம் கூட
உன்னைத்
தள்ளி வைத்து விட்டது.

அதனால்.........

மாட்டுக் கொட்டிலை
மாளிகையாக்கி
அதிலே
நீட்டி நிமிர்ந்து
நித்திரை செய்தாய்!
நிறம் வெளுத்த
நெற்றாள்கள்
உன்
நெஞ்சுக்கினிய
பஞ்சு மெத்தை!

வாடைக்காற்று
வந்துன்னை
வருடி விடும்
வசந்தம்!

காகங்களின் சுத்தல்
காதுக்கினிய
தாலாட்டு-

காலை நேரத்தில்
கண் விழித்த
பூக்களெல்லாம்
உன் காலடியில்
வீழ்வதற்காக
ஒற்றைக் காலில்
ஒன்றாக நின்றன.

கரிய இருட்டானாலும்
உன்னைக்
காண வேண்டுமென்ற
காதலால்
விழித்துக் கொண்ட
வெள்ளை மலர்கள்
விடிந்தும்
உன் தரிசனம்
கிடைக்கவில்லையே
என்ற வேதனையால்
சோர்ந்து விட்டன.

தன்னை விட
தங்கமாக
ஜொலிப்பவன் நீ
என்ற காரணத்தால்
வெண்ணிலவுக்கு
வெட்கம்
அதனால்
வெளிறிவிட்டது.

பெத்லேகம் ஊருக்கு
பிள்ளையுன் பெருமை
தெரியாதது
பெரிய விஷயமல்ல—

எல்லா ஊர்களும்
இப்படித்தான்
எந்த ஒரு
ஞானியும்
தன்னூட்டில்
ஏற்றுக் கொள்ளப்
படுவதில்லை

இப்படி நீ
இயம்பிய
வார்த்தைகளுக்குப்
பெத்லேகம் தான்
பொறுப்பேற்க
வேண்டும்.

என்றாலும்
உன்னை
இனம் கண்டு கொண்ட
பகுத்தறிவு
இல்லாத
மந்தைகள்
உன் பக்கம்
வந்து நின்றன.

மன்னவனே!
உன் மாளிகையில்
கூடி நிற்கும்
அவை தாம்
உன்
குடி மக்களா?

நல்லாயன்
நானே என்று
பின்னாளில் நீ
பேசியதில்
பெரும் பொருள்
உண்டு.

இயேசு பாலனே
நீயும் ஒரு
கோபாலன் தான்.

எண்ணப்படி ஓடும்
மனித மாடுகளை
இழுத்துப் பிடித்து
இதுதான்
வழி எனக் காட்டும்
இடையன் நீ—

கார் இருட் போதில்
நீ இந்த உலகில்
காலடி எடுத்து
வைத்ததற்கு
ஒரு காரணம் உண்டு.

உலகின்
ஒளி நீதான்
என்பதை
உணர்த்த
இப்படியும்
ஒரு வழியா?

சூரியன் விழாவும்
சுதன் உன்
பிறப்பும்
ஓரே நாளில்
நிகழ்ந்தது
உண்மையிலேயே
பொருத்தம் தான்.

தரித்திரம்
உன தம்பி.
இதனால் தானோ
தலை வைத்துப் படுக்கவும்
இடமில்லை மனுமைந்
தலைவனே
நீ சொன்னாய்.

துறவைத்
தூய்மைப்படுத்துவது
இந்த வறுமை தான
என்பதைத்
தூயவனே
உன் அவதாரம்
துல்லியமாக்கி விட்டது.

சத்தியத்தின்
சரியான வடிவம் நீ
இதனைச் சகியாத
ஏமாற்றுப் பொய்யன்கள்
உறைவாளை
உருவினார்கள்.

உலகம்
தனக்குள்ளே
சிரித்துக் கொண்டது.

கீழ்த்திசை ஞானியர்
கிறிஸ்து உன்
பிறப்பை
உணர்ந்தார்கள் என்றால்
அதன்
உட்பொருள்
இது தான.

அறியாமைத் திரை
அகலும் வரை
ஆரும்
ஆண்டவரைத்
தரிசிக்க மாட்டார்கள்.



பெத்லேகமில்
எத்தனையோ பிள்ளைகள்
பிறந்திருப்பார்கள்—
அத்தனைபேரிலும்
நீ தான்
அற்புதப்பிறவி.

எப்படி?

தாரகை ஒன்று
தன்
தலையைக்
காட்டியதாலா?

வானத்திலிருந்து
வசந்த கானம்
வந்து தழுவியதாலா?

இல்லை—

நீ—
பிறப்பதற்கு முன்பே
நின்னைப் பற்றி
சொல்லப்பட்ட
சுவிசேஷ வார்த்தைகள்
ஒன்று கூட
பொய்க்கவில்லை.

முப்பத்துமூன்று
ஆண்டுகள்
போதுமென
மூன்று ஆணிகளில்
உன் வாழ்க்கையை
முடித்தவன் நீ!

அதற்குள்—

உன் வாழ்க்கை
அப்பப்பா......
உரோமைப் பேரரசின்
உரோமம் சிலிர்க்க
வைத்தவன் நீ!
சமய
உண்மைகளையெல்லாம்
தங்கள்
சட்டைப் பைக்குள்
வைத்திருப்பதாக
எண்ணிக்கொள்ளும்
போலிக் குருக்களின்
பொய்முகங்களை
வீதிக்குக் கொண்டுவந்து
வெளிச்சம் போட்டுக்
காட்டியவன் நீ—

வெள்ளையடிக்கப்பட்ட
கல்லறைகள் என
அவர்களை
விளம்பரப் படுத்தியவனும்
நீ தான்.

உண்மை
உன்
நாடிநரம்பெல்லாம்
ஊற்றெடுத்துப்
பாய்கிறது

இதனால் தான்
உன்
அந்திம நேரத்தில்
உன்னைக்
காறித்துப்பி
கசையால் அடித்தும்
நீ அசையவில்லை.

இதைக் கண்டு
பேசும் சக்தியை
இழந்த பிலாத்து
கை கழுவியதும்
காணாமற் போய்விட்டான்.

பித்தனாகிவிட்ட
பெரியகுரு
கத்திக் குழறி
தன் அங்கியை
கண்டபடி
கிழித்தெறிந்தான்.

சத்தியத்தின்
சக்தி
சாதாரணமானதல்ல
என்பதை—
சர்வேசுரன் மகனே
சரியாக நிரூபித்தாய் நீ!

உத்தமனே
உன் புதுமைகளை
உலகம்
நம்ப மறுக்கலாம்

போதனைகள்
கற்றோடு
போய்விடலாம்
ஆனால்-

உன்
முப்பத்து மூன்று
ஆண்டு கால
வாழ்க்கை
இருக்கிறதே-

அது-
முடி மலையில்
ஏற்றப்பட்ட
மூதது மணிவிளக்கு
இந்த உலகம்
இருண்டு
விடாமல் இருப்பதற்கு
அந்த விளக்குத்தான்
காரணம்-
சூரியன் என்பது
சுத்தப்பொய்

உதிக்கும் போதும்
அஸ்தமிக்கும் போதும்
உலகத்தில்
சரித்திரம் படைத்த
சாதனையாளன்
நீ ஒருவன் தான்.

குடிசையைக்
கோயிலாக்கியது போல
குற்றவாளிகளைத்
தண்டிக்கும்
கொடூரச் சிலுவையை
மீட்பின் சின்னமாக
மேலே
உயர்த்தி
வைத்தவன் நீதான்.

மண்டை ஓடு
எனும்
பொருள் கொண்ட
மலைக்குக் கூட
மகிமை வந்தது
உன்னால் தான்.

அந்தக் காலத்திலும்
ஆலயங்கள்
வியாபார நிலயங்களாக
ஆக்கப்பட்டபோது
உன் இளமை
கொதித்தது

சாட்டை எடுத்தாய்
கையில்
சமூக விரோதிகள்
ஓட்டம் பிடித்தார்கள்
ஒரு நொடியில்

அவன் பாவி
இவன் பாவி
என்று—
ஆரும்
ஆரையும் சொல்ல
அனுமதியாதவன் நீ
மரிய மதலேனாளை
மாக்கள் சிலர்
கற்பிழந்தவள் என்று
செல்லெறிந்த பின்னால்
கல்லெறிய
கையெடுத்த போது
குனிந்து நீ
நிலத்தில் ஏதோ
குறித்து விட்டு
நிமிர்ந்து பார்த்தாய்
அங்கே
நிழல்தானும் இல்லை.
பிரிவினைக் கோடு கீறி
பேதம் வளர்க்கும்
பித்தர்களிடம்
உன்னைப் போல்
உன் அயலானை நேசி
என்று
உரத்துச் சொன்னவன் நீ.

நல்ல சமாரித்தனை
நானிலத்திற்கு
அறிமுகப்படுத்தியவனும்
நீ தான்.

பாவிகளோடு
சமபந்தி போசனம்
செய்கின்றான்
என
உன்னைப் பார்த்து
பரிகசித்தார்கள்
பரிசேயர்கள்
பாவம் அவர்கள்.

முப்பது வயது வரை
முழுமையாக
அப்பா அம்மாவுக்கு
அடி பணிந்தவன் நீ

கட்டுப்பாடு
உன் குருதியில்
கலந்தது.

இறுதி மூவாண்டு
காலத்தில்
எத்தனையோ
இடங்களுக்கு
சூறாவளி
சுற்றுப் பயணம்
செய்த போதும்
உன்
சுதந்திரக்
குதிரைக்குக்
கடிவாளச்
சுருக்குப் போட்டவன் நீ

சந்த
உலகத்தின்
சந்தடியிலிருந்து
முற்றாக ஒதுங்கி

... 9 ஆம் பக்கம் பார்க்க



## சென்றவாரத் தொடர்

நான்காம் பால பாடம் "தமிழ்" என்ற பாடத்தில் முதற் பந்தியில் "திராவிடமென்னும் வடமொழி தமிழென்ருயிற்று" என்பது காணப்படுகின்றது. இது தவருன கூற்று; இது நாவலரால் எழுதப்பெற்றதோ அல்லது பிற்கால உரிமையாளர்களால் புகுத்தப்பெற்றதோ என்பது ஆராயற்பாலது. "தமிழ்ச் சொன் முடிவு" என்ற தலைப்பில் "திராவிடப் பிரகாசிகை" என்னும் நூலில் அதன் ஆசிரியர் சபாபதி நாவலர் பின்வருமாறு எழுதுகின்ருர்: (கி. பி. 1899 இல் வெளியான முதற்பதிப்பு பக்கம்-7)

### தமிழ்ச் சொன் முடிபு

தமிழ் என்னும் சொல் இனிமைப் பண்புணர்த்தும் அது.

"தேனுறை தமிழும் திரு
வுறை கூடலும்
மணத்தலின் மதிக்குல மன்
னனுகியும்"

என்னும் கல்லாடத்திலும்'

'தமிழ் தழிய சாயலவர்
தங்குமலர்த் தூநீர்
உமிழ் கரக மேந்தவுர
வோனமர்ந்து பூசி'

என்னும் சிந்தாமணியினுலும்'

'தமிழ் மென் சாயலவளொ
டும்,

என்னும் வாயவ்விய சங்கிதை
யினுலும்

'வண்டு தமிழ்ப் பாட்டி
சைக்கும் தாமரையே'

என்னும் இராமாயணத்தினுலும், தெரிக-

'தமிழ்த்தழிய சாயலவர்' என்பதற்கு நச்சினுர்க்கினியர் 'இனிமை தழுவிய சாயலையுடையவர்' என்று பொருளுரைத்தார் தமிழ் என்னும் தருமவாசகம் தருமிமேல் நின்றது: முருகு என்னும் பண்புமுருகன் என்னும் பண்பிமேல் நின்றவாறு போல, ஈண்டுத் தருமிமொழி மொழி எனினும் பாடை எனினும் ஒக்கும். பிரயோக விவேக நூலார் "திரமிளம் என்னும் ஆரியச் சொல் தமிழ் எனத் திரிந்தது என்று கொண்டாரால் எனின், – முதன்மையுடைய இம்மொழியைத் தோற்றிய காலத்து இறைவன் தன் சொல்லால் இதனை வழங்க இதற்குக் குறியீடு தருதல் அன்றிப் பிறபாடைச் சொல்லால் இதற்கு அன்னதோர் பெயரினை திரித்துநிறுத்தினுன் என்றல்பொருந்தாமையின், அது செல்லாது என மறுக்க இன்னும் இனிமைப் பொருள் உணர்த்தும் தமிழென்னும் பண்புச் சொல் தன் சொல்லால் இதன் கண் நிலைபெறுவதாகவும் அதனை விலக்கி அவ்வாறு கோடல் செல்லாமை உணர்க. இதனுலே, 'தமிழ், திராவிடம் என்னும் வடமொழித் திரிபு' என்று கொண்டார் மதம் மறுக்கப்பட்டவாறும் அறிக. வடமொழிக் கடலும் தென்மொழிக் கடலும் நிலைகண்டுணர்ந்த ஆசிரியர் சிவஞான யோகிகள் 'எவ்வினையும் ஒப்புதலால் திராவிடம் என்று இயல்பாடை' என்று வடமொழியார் தென்மொழியை ஆளும் குறியீடு வேறு கூறி வைத்து, மூன்று உறழ்ந்த பதிற்றெழுத்தான் முழுவதுமாய் உனக்கு இனிதாய்த் தோன்றிடும் அத்தமிழ்ப் பாடை என்று தென்மொழியார்தம் மொழியால் தென்மொழியை ஆளும் குறியீடு யாம் கூறியவாறே பொருள் தெரிந்து வேறு நிறுத்துதலின், இச்சொன் முடிபே தொல்லாசிரியர் வழக்காருப் பயின்று போதரும் இயன் முடிபு என்பது அப்பெரியார்க்கும் கருத்தாதல் பெற்றும். இன்னும் அகத்தியம் தமிழ்ச் சுதந்திர இலக்கணக முதல் நூலாகவும், அது வடமொழிப் பரணினிய வியாகரணத்தின் வழித்தோன்றியதோர் நூலாம்' என்றும், அகத்தியத்தின் வழித்தோன்றியது தொல்காப்பிய இலக்கண நூலாகவும் அது வடமொழி ஐந்திரவியாகரணத்தின் வழித் தோன்றியதோர் நூலாம்' என்றும், பிரயோக விவேக நூலார் முறை திறம்பி உரைத்தார். அவையெல்லாம் ஆரியாபிமானம் காரணமாக வரன்முறை திறம்பிக் கூறியனவேயாம்.



இதுவரையிற் கூறியன சபாபதி நாவலர் கூற்றும்.

தமிழ் என்னும் இப்பாடத்தில் சிவஞான முனிவர் திருவாய் மலர்ந்தருளிய,

"வடமொழியைப் பாணி
னிக்கு வகுத்தருளி அதற்
கிணையாத்
தொடர்புடைய தென்
மொழியை உலகமெலாம்
தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார்
கொல்லேற்றுப் பாகர் எனில்
கடல் வரைப்பில் இதன்
பெருமையாவரே கணித்தறி
வார்?"

என்ற காஞ்சிப்புராணத் திருப்பாடலைப் பாடத்தின் ஈற்றில் நாவலர் குறித்திருக்கின்ருர் "தொடர்புடைய தென்மொழி" என்றது 'இம் மண்ணுலகம் தோன்றிய காலத்திலேயே அதனுடன் அதன் தென் பகுதியில் தோன்றிய புகழினை உடையது தமிழ்: அதனுல் இது தென் மொழி எனப்பெயர் பெற்றது மக்கள் இனம் முதன் முதல் தோன்றும் புகழ்ச் செல்வத்தை உடைமையினுலே தமிழகம் திரு- இடம்- திருவிடம் எனவும் பெயர் பெற்றது. அத் திருவிடமே திராவிடம் என மருவிற்று; அது தான் திரமிளம் எனவும் சிலரால் சொல்லப் பெற்றது." என்பர் ஆராய்ச்சிப் பேரறிஞர். மேலும் "தமிழைப்போல இலக்கணவரம்புடைய மொழி இம் மண்ணுலகில் வேறு எதுவும் இல்லை. ஆதலின் ஏனைய மொழிகளுக்கு இதனேடு ஒப்பிட்டுப் பேசும் தகுதியில்லை" என்று கூறுவர் மொழியாராய்ச்சிப் பெரும்புலவர். இதனையே திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவர் அப்புராணத்தில்,

"கண்ணுதற் பெருங்கடவுளும்
கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த
இப்பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைச் சில இலக்கண
வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப் படக் கிடந்
ததா எண்ணவும் படுமோ"?

என்று கட்டளையிட்டருள்கின்ருர். இப்பாடலையும் நாவலர் தமிழ் என்ற பாடத்தின் ஈற்றில் எடுத்தெழுதியிருக்கின்ருர். இத்தகைய திருப்பாடல்களை மேற்கோளாக எழுதியுள்ள நாவலர் "திராவிடம் என்னும் வடமொழி தமிழ் என்ருயிற்றி" என்று குறித்திருப்பாரா? என்பதை அறிஞர் ஆய்வாராக.

இவருடைய பாலபாடங்கள் ஏணிபோல மாணவரைப் படிப்படியாக ஏற்றி அறிவுச் சிகரத்திற் கொண்டு சேர்க்கும் வன்மையுடையன. சத்திரம், மடம் முதலிய நான்காம் பால பாடப் பகுதிகள் சிறந்த அறிஞரும் படித்துப் படித்துப் பாராட்டும் பெருமைபெற்றன.

இவர் எழுதியிருக்கும் இலக்கண வினுவிடை முதலிய இலக்கண நூல்கள் மாணவர்க்குக் கற்பகம் போல அறிவு வழங்குவன. ஒருபிழை கூடக் காண முடியாதபடி நூல்களை எழுதி அச்சிட்டருளிய நாவலர் பெருமான் புகழை இக்காலம் அந்நூல்களை அச்சிடுவார் தவருக அச்சிட்டுக் கெடுத்து விடல் கூடாது இலக்கண வினுவிடை 1956 இல் அக்டோபரில் அச்சிட்ட இருபத்தோராவது பதிப்புப் பக்கம் இரண்டில் இனவெழுத்துக்களைப் பற்றிக்கூறும் இடத்தில் "ஏகாரத்திற்கு ஓகாரம் இனமாகும்" என்று அச்சிட்டிருப்பது மன்னிக்க முடியாத தவறு எனப் பெரியார் பலர் கருதி வருந்துகின்றனர் ஒகரத்துக்கு" என்றிருக்க வேண்டுவது "ஏகாரத்துக்கு" என்று பிழைபட அச்சிடப் பட்டுள்ளது.

# நாவலர் கண்டனவன்மை நக்கீரரையும் விஞ்சியது

## டாக்டர் இ. மு. சுப்பிரமணியபிள்ளை

நாவலர் "போலி அருட்பா மறுப்பு" என ஒரு நூலை முப்பத்திரண்டு பக்கங்களில் எழுதி மாமண்டூர் தியாகேச முதலியார் பெயரால் அச்சிட்டு வெளியிட்டார். இவர் எழுதிய கண்டன வன்மை படித்தறியத் பாலது. இது ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு என்ற நூலின் முதற்பாகத்தில் பக்கம் 89–121 ஆக அச்சிடப் பட்டுள்ளது அதில் பின்வரும் பகுதி ஆராயத்தக்கது:-

"பிரளயாகலராவார் இருமலமுடையவராகிய உருத்திரர்களென்பதும், சகலராவார்.மும்மல முடையராகிய பிரம விட்ணு முதற் கிருமி யீருக உள்ள உயிர்களென்பதும், சாதாரணமாகிய தத்துவக் கட்டளைகள் வாசித்தவருக்குத் தெரியுமே! அஃதறியாது பிரளயாகலர் மும்மலங்களுள் ஒருமல நீத்தோர் அவர் பிரமன் முதலானேர் என்று ஒழுவிலொடுக்கவுரைப் புத்தக முதலிலே பதிப்பித்த இராமலிங்க பிள்ளையா ஓதாதுணர்ந்தவர்! ஸ்ரீ ஸ்திரி என்னுஞ் சொற்களுக்கும் வேற்றுமையறியாது, ஸ்ரீ கண்ட பரம சிவனென்பதற்குப் பெண்ணைப் பாகத்துடைய பரமசிவனெனப் பொருள் கூறித் தமதறியாமையை உலகறியப் புலப்படுத்திய இராமலிங்க பிள்ளையா ஓதாதுணர்ந்தவர்! அவர் தாம் பதிப்பித்த ஒழுவிலொடுக்கவுரையிலேசுழுமுனையைச் சுழிமுனையென்றும் சொர்ப்பனத்தைச் சொற்பனமென்றும், ஞாதிருவை ஞாதுருவென்றும். கேட்கவென்பதைக் கேழ்க்கவென்றும்,சரியையைச் சரிதையென்றும், பிராரத்தத்தைப் பிராரத்துவமென்றும், தோன்றிய விருதுகாலமென்பதைத் தோன்றப்பட்ட விருதுகாலமென்றும், நூல்கேட்டலை நூற்கேட்டலென்றும், அழியுமித்தேகாதியென்பதை அழயப்பட்ட வித்தேகாதியென்றும், மண்ணினின்றுங் கடகலசாதிகாரியங்களென்பதில் மண்ணினின்றென்பதை மண்ணையென்றும், நூல்களறிவிக்க மாட்டா என்பதை நூல்கள் அறிவிக்க மாட்டாதென்றும், மகேசுரனை மயேசுரனென்றும், இச்சா யத்தினத்தை இச்சாயெத்தினமென்றும், அத்தமயனத்தை அத்தமானமென்றும்.அவைகளறியா வென்பதை அவைகளறியாதென்றும்,இச்சாஞான முதலிய வருவிக்கப்பட்டனவென்பதிற் பட்டனவென்பதைப் பட்டதென்றும்,போயவிடத்தான்மாவென்பதைப் போயவிடத்துவான்மாவென்றும், பெத்த தசையைப் பெத்த திசையென்றும், வர்ணத்தை-வர்ந்நமென்றும், கதிரவனுக்கு மசுத்தமுமின்ருயதென்பதைக் கதிரவனுக்குஞ் சுத்தமுமின்ருயதென்றும், சகமார்க்கத்தைச் சகசமார்க்கமென்றும், நேதிகளைதலை நியதிகளைதலென்றும், வெதுப்புதலை வெதிப்புதல் என்றும், உற்பிச்சத்தை உற்பீசமென்றும், தொடையைத் துடையென்றும், மித்தியா ரூபத்தை மித்தியா ரூபமென்றும், ஆகவென்னும் வினையெச்சங்களை ஆயென்றும் பதிப்பித்திருக்கின்ருரே. இன்னும் அப்புததகப் பிழைகளை எடுத்துச் சொல்லப் புகின், மணற்சோற்றிற் கல்லாராயப் புகுதல் போலும். அப் புத்தகத்திற் பல விடங்களிற் பெயரெச்சங்களை முற்றெனக் கொண்டு முற்றுக்குறி கொடுத்து வரிமுடிவு செய்து, அவைகொள்ளும் பெயர்களை வேற்றுவரிக்கு முதலாகக் கொண்டு தொடங்கியிருக்கின்ருரே. இவ்வியல்புடையவரா ஓதாதுணர்ந்தவர்! குமரகுருபர சுவாமிகள் ஐந்து பிராயம் வரையும் ஊமையாய் இருந்து திருச்செந்தூர் முருகக்கடவுளது திருவருளினுல் ஓதாதுணர்ந்தவுடனே பாடியருளிய திருச்செந்தூர்க் கலிவெண்பா இலக்கணப்பிழைகளில்லாததையும், சைவசித்தாந்த சாத்திரத்துண்மைப் பொருளுடையதாயும் இருக்கின்றதே. அவர் பின் பாடியருளிய பிரபந்தங்களும் அவ்வாறே இருக்கின்றன.அங்ஙனமாகவும், அவர் தாம் ஓதாதுணர்ந்தவர் என்று தம்மை எவ்விடத்தேனும் புகழ்ந்து கொள்ளவில்லையே. இராமலிங்க பிள்ளையோ சிறுவர்களுக்குள்ளகல்வியறிவுதானும் இல்லாதவராய் இருந்து கொண்டு தம்மைத்தாமே ஓதாதுணர்ந்தவரன்று புகழ்ந்துகொள்ளுதல் சாலவும் வியக்கற்பாலதாம்."

இவர் எழுதியுள்ள பெரிய புராண வசனம் திருவிளையாடற் புராண வசனம முதலிய உரைநடை நூல்கள் இணையற்றன.பெரிய புராணத்தை இவர் தாம் எழுதிய சூசனத்தோடு அச்சிட்டிருக்கிருர் சூசனம் என்பது விளக்கக் குறிப்பு. சூசனத்திற் சில பகுதிகளை ஆராய்வோம்

அறுபத்துமூன்று நாயன்மார்களுள் பேரழகியாகிய தம் திருமனையாளை அருகில் வைத்துக்கொண்டே காம இச்சையை வெல்லுவதாகிய செயற்கரும் பெருஞ்செயலைச் செய்த திருநீலகண்டநாயனர் புராணம் முதலாவதாகவும், பெருந்திருவாகிய தம் திருமனைவியையே அடியாருக்கு அளித்த இயற்பகை நாயனர் புராணம் அதனை அடுத்தும் கூறப்பெறுகிறது. அந் நாயனர்களைப் பற்றி நாவலர் எழுதிய சூசனத்தை எடுதெழுதி ஆராய்ந்ததும்.

"இவ்விருவரும், மிக்க இளமைப் பிராயத்தினராய் இராப்பகல் ஒரே இடத்தில் இருந்தும்,தங்களுக்குள்ளே நிகழ்ந்த சபதம் சிறிதாயினும் வழுவாவண்ணம், காமத்தை முற்றும் ஒழித்து வாழ்ந்த பெருந்தகைமையை நினைக்குந்தோறும் இவர்களிடத்துள்ள சிவபத்தியின் வலிமை விளங்குகின்றது. விட்டுணு, சலந்தராசுரன் இறந்துவிட, காம மிகுதியினுல் அவனது சரீரத்திலே புகுந்து, அவனுடைய மனைவியைப் பலநாட் புணர்ந்து பின்புதம்மை விட்டுணு என்று உணர்ந்த அவளாலே சபிக்கப்பட்டு, வருத்தமுற்ருர். பிரமா தம்மாலே படைக்கப்பட்ட திலோத்தமையினது அழகைக் கண்டு மயங்கி, அவளைப்புணரின் மகட்புணர்ச்சிக் குற்றமாம் என்பதும் பாராமல், அவளைத் தொடர்ந்தார். இந்திரன் கௌதம முனிவருடைய மனைவியாகிய அகலிகையைப் புணர்ந்து, தன்னுடம்பிலே ஆயிரம் யோனி உண்டாகும்படி அம்முனிவராலே சபிக்கப்பட்டான். சந்திரன் தன் குருவாகிய வியாழனுடைய மனைவியைப் புணர்ந்து, கயரோகம் அடைந்தான். இன்னும் முனிவர்கள் பலர் உண்டி முதலியவற்றை ஒழித்து, மலைகளிலும் காடுகளிலும், தவஞ்செய்யும் பொழுது தேவப் பெண்களையும் அசுரப் பெண்களையும் இராக்கதப் பெண்களையும் கண்டு மயங்கி, பாவம் என்பதும் பழியென்பதும் பாராமல், அவர்களைப் புணர்ந்து தங்கள் தவத்தை இழந்தார்கள். தருமம் வளர்ந்தோங்கும் முன்னை யுகங்களிலே, தேவர்கள், முனிவர்கள் தாமும், காம மிகுதியினுலேயே வேற்றுப் பெண் கமனம், புத்திரி கமனம், குருபன்னி கமனம் முதலிய பெருங்கொடும் பாவங்களைச் செய்தார்களே! இக்கலியுகத்திலே இந்நாயனுரோ, தமது மனைவியார் சிவனைச் சுட்டி இட்ட ஆணைய கடத்தல் சிவத்துரோகமாம் என்பது பற்றி, மனைவியைத் தானும் புணராதொழிந்தார்! இதனுல் இவரது பக்தி மகிமை எவ்வளவு வியத்தக்கது! இவ்வியப்பு நோக்கியன்ருே, பட்டினத்துப் பிள்ளையாரும் "மாது சொன்ன சூளால் இளமை துறக்கவல்லேன் அல்லன்" என்ருர்.

கற்புடைய மகளிரும், அழகிற் சிறந்த ஆடவரைக் காணில், அவர் தமக்குத் தந்தையராயினும், உடன்பிறந்தோராயினும், பெற்றபிள்ளைகளாயினும்,தமது நிலைகலங்கி, அவரையும் நிலை குலைப்பார்களே! இவ்வாருகவும்,இந்நாயனுரும், மனைவியாரும், மிக்க இளமைப் பருவத்தவராய் இராப்பகல் ஒரே இடத்தில் இருந்தும், புணர்ச்சியின்றிச் சபதத்தைப் பேணியமையால் இவர்களது சிவ பக்தியின் பெருமை இவ்வளவு என்று சொல்லத்தக்கதன்று. இந் நாயனுர் பரமசிவன் சிவயோகியராய் வந்து தம்மிடத்து வைத்த ஓட்டைத் காம்கவராமைக்குத் தமது மனைவியைக் கைப்பிடித்துக் குளத்திலே முழுகிச் சத்தியம் பண்ணித் தரச்சொன்ன வழியும், சபதம் வழுவாமற் காத்தார்."

இனி நாவலர் இயற்பகையாரைப் பற்றிக் கூறும் சூசனம் காண்பாம். "இவரிடத்துள்ள இம்மெய்யன்பை, சர்வான்மாக்களும் உணர்ந்து உய்யும்படி. உணர்த்துகற்குத் திருவுளங்கொண்ட கிருபா

... 13 ஆம் பக்கம் பார்க்க

## இவ்வாரச் சிறப்புக் கட்டுரை

# முதுபெரும் டாக்டருடன் முப்பது நிமிடங்கள்

புன்முறுவல் தவழும்முகமும் மக்கள் பணியில் மகிழும் நல்லுளளமும், எளிமை வாழ்வும் கொண்ட டாக்டர் நா. திருஞானசம்பந்தன் (சம்பந்தன்) அவர்கள் வைத்தியத் தொழிலுக் கென்றே பிறந்தவர். கைராசிக்காரர் என்றும் தர்மவான் என்றும் மக்களால் போற்றப்படும் அவர் தமது அனுபவங்களை இக்கட்டுரையில் கூறுகின்றார்.

**மு. ரவீந்திரன்**

அப்போதுநான் கொழும்பு அரசினர் வைத்தியசாலையில் டாக்டராக பணிபுரிந்து கொண்டிருந்தேன் விடுமுறைக்கு எனது சொந்த இடமான காரைநகருக்கு திரும்பும் போது மூளாயில் சிறிய கட்டடங்களுடன் ஒரு ஆஸ்பத்திரி அமைந்திருப்பதை கண்டேன். தெருவோரமாக இரண்டொரு மாட்டுவண்டிகளும் நிறுத்தப்பட்டிருந்தன கிராமச் சூழலில் வசதிகள் எதுவுமின்றி காணப்பட்ட வைத்தியசாலையைப் பார்த்ததும் அதுவே நான் வேலை செய்ய ஏற்ற இடம் என உணர்ந்தேன்.

ஊருக்குச் சென்றதும் முதல் வேலையாக என் பெரிய தந்தையிடம் சென்று அந்த வைத்தியசாலை பற்றி விசாரித்தேன். எனது ஆர்வத்தைக் கண்ட அவர் இது சிங்கப்பூர் பென்சனியர்களால் கட்டப்பட்டது போய் வரலாம் வா என என்னை அழைத்துச் சென்றார். நானும் பெரிய தந்தையும் காரைநகரிலிருந்து மூளாய்க்கு நடந்தே சென்றோம்.

### மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை

சில நோயாளர்களை மட்டுமே கொண்டிருந்த மூளாய் வைத்தியசாலையில் ஊழியர்கள் மிகவும் கடினமான சூழ்நிலையில் அரிக்கன் லாம்பின் உதவியுடன் வேலை செய்தனர். இதை அவதானித்ததும் இளைஞனை எனக்குள் ஓர் ஆர்வம் பிறந்தது. முன்னைய எண்ணம் வலுப்பெற்றது. நாங்கள் வைத்தியசாலையை பார்வையிட்டுக் கொண்டிருக்கையில் அதன் செயலாளர் சபாபதிப்பிள்ளை எங்களை எதிர் கொண்டார். எனது பெரிய தந்தையார் என்னை அவருக்கு அறிமுகம் செய்தார். உங்கள் வைத்தியசாலைக்கு வேறு டாக்டர்கள் தேவைப்படுகின்றார்களா என நான் சபாபதிப்பிள்ளையிடம் கேட்டேன். ஆம் என பதிலளித்த அவர் என்னை வைத்தியசாலையின் தலைவர் டாக்டர் செல்லையாவுடன் கதைக்குமாறு கூறினார்.

செல்லையா அவர்களிடம் எனது விருப்பத்தைத் தெரிவித்தேன். சம்மதம் தெரிவித்த அவர் அரசாங்க சம்பளத்திலும் பார்க்க மிகக் குறைந்த தொகையான சம்பளத்தில் வேலை செய்ய தங்களால் முடியுமா என்று கேட்டார். எனது பூரண திருப்தியை வெளியிட்டேன். 1944 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் டாக்டராக பணியேற்றேன். எனது செயலுக்கு உறவினர்கள் பலரும் எதிர்ப்புத் தெரிவித்தனர். என் அம்மாவும் முதலில் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. அருமந்த அரசாங்க உத்தியோகத்தை விடுவதா என்ற எண்ணம் அவர்களுக்கு.

### இளவயது ஆவல்

எனது இளவயதில் மலேசியாவில் உள்ள 'ரைப்பிங்' என்ற இடத்தில் கல்வி கற்பதற்காக எனது மாமா வீட்டில் தங்கியிருந்தேன். எனது தாய், தந்தையரும் மலேசியாவிலேயே 'பீடோர்' என்ற இடத்தில் வசித்து வந்தனர். விடுமுறைக்கு நான் பெற்றோரிடம் சென்று வருவதுண்டு. மலேசியாவில் ஆரம்பக் கல்வியை மேற்கொண்டதால் எனக்கு தமிழில் அதிகம் பரிச்சயம் இல்லாமல் போய் விட்டது. அக்காலம் தந்தையார் என்னிடம் கூறிய அறிவுரை இன்றும் என் நினைவில் இருக்கின்றது. அது. எந்தத் தொழிலைச் செய்தாலும் சுதந்திரமாக செய்ய வேண்டுமென்பதே.

பாடசாலையில் படிக்கும் போது பல நூல்களைப் படித்தேன். டாக்டர் அல்பேட் சுவைட்சர் சரித்திரம் படித்த பின் அவரைப்போல் நானும் டாக்டராக வேண்டும், பாமர மக்களுக்கு என்னால் முடிந்ததை செய்ய வேண்டும் என எண்ணினேன்.



1929–ல் இலங்கைக்கு வந்து மவுண்லெவெனியா சென். தோமஸ் கல்லூரியில் படிப்பைத் தொடர்ந்தேன். எமது பாடசாலையில் ஒரு சமூக சேவை அமைப்பு இருந்தது. அதன் மூலம் கிழமையில் இரண்டு தினங்கள் அயற் கிராமங்களுக்குச் சென்று சேவை செய்து வந்தோம். எனக்கு முதலுதவி சம்பந்தப்பட்ட வேலைகளில் அதிக ஆர்வம் இருந்தது. படிக்கும் காலத்தில் வகுப்பில் முதலாவதாகவோ தவறினால் இரண்டாவதாகவோ தான் வருவேன். கணிதம், ஆங்கிலம், ஆகிய பாடங்கள் எனக்கு அதிகளவு பெறுபேறுகளைப் பெற்றுத் தந்தன. இருந்தும் டாக்டராக வரவேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக விலங்கியல், தாவரவியல் பாடங்களை உயர் வகுப்புகளில் படித்தேன்.

### இலங்கைப் பல்கலைக்கழக முதல் டாக்டர்

1943–ல் இலங்கைப் பல்கலைக்கழக முதல் பட்டம் பெற்ற டாக்டராக வெளியேறினேன். நான் கல்விகற்ற காலத்தில் இலங்கையில் பல்கலைக்கழகங்கள் இருக்கவில்லை பல்கலைக்கழக கல்லூரிகளே இருந்தன. இவை இங்கிலாந்திலுள்ள பல்கலைக்கழகங்களில் பதிவு செய்யப்பட்டனவாக இயங்கிவந்தன. எனக்கு கொழும்பு பல்கலைக்கழகம் அளித்த பட்டமே இலங்கைப் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட முதலாவது பட்டமாகும்.

### அரசாங்க டாக்டர்

நான் டாக்டர் பட்டம் பெற்ற அதேயாண்டு கண்டி அரசாங்க வைத்திய சாலைக்கு பணியாற்ற சென்றேன். பின்னர் கொழும்பு அரசாங்க வைத்தியசாலையில் பி.ஈ பெர்ணண்டோ, குணரட்ணம்குக் ஆகியோருக்குக் கீழ் வேலை செய்யும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது வைத்தியத் துறை சம்பந்தமான பல நுணுக்கங்களைத் தெரிந்து கொண்டேன்.

### பெற்றோமாக்ஸ் ஒளியில் சத்திர சிகிச்சை

அரசாங்க வைத்தியராக இருந்து விலகி மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நான் வேலை பார்த்த ஆரம்ப காலத்தில் அப்போது அங்கு தலைமை டாக்டராக இருந்த இந்தியாவைச் சேர்ந்த சார்க்கோ என்பவர் 'பெற்றோமாக்ஸ்' உதவியுடனேயே சத்திர சிகிச்சைகளை செய்து வந்தார். நான் அவருக்கு உதவியாக கடமையாற்றி வந்தேன் அக்காலம் சத்திரசிகிச்சைக் கருவிகளை கிருமி நீக்கம் செய்வதற்கு உரிய வசதிகள் இருக்கவில்லை. இட்டலிப்பானையையே இதற்குப் பயன்படுத்தினோம். சில நாட்களில் இருபத்து நான்கு மணிநேரமும் நானும் சார்க்கோவும் வேலை செய்தோம். பன்னிரண்டு ஊழியர்கள் மட்டுமே கடமை புரிந்தனர். சலம் பரிசோதித்து ஊசி போடுவதற்கு இருபத்தைந்து சதமும், சிறு சத்திர சிகிச்சை செய்வதானால் பத்து ரூபாவுமே அப்போது அறவிடப்பட்டது. வாழ்க்கைச் செலவும் அக்காலம் மிகக் குறைவாகவே இருந்தது.

நான் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் டாக்டராகி எட்டுமாத காலத்திற்குள்ளாகவே என்னுடன் கடமையாற்றிய சிரேஷ்ட வைத்திய அதிகாரி சார்க்கோ விடுமுறையில் இந்தியா செல்ல நேர்ந்தது நான் மட்டுமே மூளாயில் கடமையிலிருந்தேன். என் வாழ்வில் மறக்க முடியாத நிகழ்வு ஒன்று ஏற்பட்டது

கர்ப்பிணி ஒருவரை மகப்பேற்றுக்காக வைத்தியசாலைக்கு கொண்டுவந்திருந்தனர். ஒப்றேசன் செய்ய வேண்டிய கேஸ். எனக்கோ அந்த சத்திர சிகிச்சை செய்து அனுபவமில்லை அதனால் வேறு வைத்தியசாலைக்கு கொண்டு செல்லுமாறு அப்பெண்ணின் கணவரிடம் கூறினேன். அவரோ நீங்கள்தான் ஒப்பறேசன் செய்ய வேண்டும் என்று பிடிவாதமாக நின்றார்.

### முதல் வெற்றி

காலை ஒன்பதுமணி, மனம் ஒரே பதட்டமாகவிருந்தது. மகப்பேற்று சத்திரசிகிச்சை சம்பந்தப்பட்ட நூல்களை ஒருமுறை மேலோட்டமாகத் தட்டிப்பார்த்தபின் சத்திர சிகிச்சை நிலையத்திற்குச் சென்றேன். சத்திரசிகிச்சைக் கருவிகள் அதிகமிருக்கவில்லை பிற்பகல் மூன்று மணியிருக்கும் மலேயன் ரெஸ்சர் கிருஷ்ணன் மயக்கமருந்து கொடுக்க நான் சத்திரசிகிச்சை செய்தேன். எல்லாம் நல்லபடியாக முடிந்தன. தாயும், பிள்ளையும் பத்து நாட்களின்பின் வீடு சென்றனர். எனக்கு என்னில் நம்பிக்கையுண்டு, அதற்கும் மேலாக இறைவனை நம்புகிறேன்.

### வெளிநாட்டில் சிறப்புக் கல்வி

1947 ஆம் ஆண்டு சத்திர சிகிச்சையில் சிறப்புப் பட்டம் பெறுவதற்காக மூளாய் வைத்தியசாலை நிர்வாகத்தினர் உதவியுடன் எடின்பெரோ சென்று கிளாஸ்கோவிலும். மார்ச்சில் எடின்பெரோவிலும் சத்திரசிகிச்சையில் நிபுணத்துவப் பட்டத்தைப் பெற்றேன். பின்பு சில மாதங்கள் சுவீடனிலும், சுவிற்சர்லாந்திலும் தங்கியிருந்து மேற்கத்தைய வைத்தியமுறைகள், மற்றும் மகப்பேறு சம்பந்தப்பட்ட பாடநெறிகளையும் கற்றுத் தாய்நாட்டுக்குத் திரும்பி மூளாயில் மீண்டும் எனது சேவையைத் தொடர்ந்தேன்.

நான் இங்கிலாந்துக்குப் போகு முன்னரே மூளாயில் நோயாளர் அதிகரிக்கத் தொடங்கிவிட்டனர். இதனால் ஓலைக்கொட்டில்கள் பல கட்டி நோயாளரைப் பராமரித்தோம். ஊரில்உள்ள கொடைவள்ளல்களின் உதவியுடன் சத்திரசிகிச்சைக் கூடமும் அமைக்கப்பட்டது. இக்காலப் பகுதியில் டாக்டர் செல்லத்துரை என்பவரும் எங்களுடன் வந்து இணைந்து கொண்டார். ஆக மொத்தம் மூன்று டாக்டர்கள் கடமையாற்றினோம் 1949 ல் ஜெனரேட்டர் ஒன்றும் வாங்கப்பட்டது இதன் உதவியால் சத்திர சிகிச்சை செய்வது இலகுவாக அமைந்தது.

மூளாய் வீதியில் புட்டுத்தின்னிஆலடி என்று ஓர் இடம் உண்டு காரைநகரிலிருந்து மாட்டுவண்டில் கட்டி தூர இடங்களுக்குச்செல்லும் சனங்கள் இவ்விடத்தில் தரித்துச் செல்வது வழக்கம். இங்குள்ள ஆலமரத்தில் வசிக்கும் முனி எங்கே தம்மை அடித்துவிடுமோ என்ற பயத்தால் மக்கள் இரவுவேளைகளில் இவ்வழியால் செல்லப் பயப்படுவார்கள். மூளாய் வைத்தியசாலைக்கு ஜெனரேட்டர் மூலமாக மின்சாரம் கிடைத்தபின் மக்கள் மத்தியில்காணப்பட்ட முனிபற்றிய பீதியும் மறைந்துவிட்டது.

### நவீன வசதிகள்

படிப்படியாக வைத்தியசாலையில் வசதிகளை அதிகரித்தோம். சத்திரசிகிச்சைக் கருவிகளை கிருமி நீக்கம் செய்வ

—13 ஆம் பக்கம் பார்க்க

# இந்த வாரம் உங்கள் பலன்

யாழ்சோதிடர். ச. அரியநாயகம்

**25-12-88 -- 31-12-88 வரை**

**மேடம்:** மாதா வழி கவலை, வாகன சுகம், வாணிகர்கள். கடற்றொழிலாளர் சமபலன், கன்னியர் வாழ்வில் சுகஜீவியம், வெளியூர் போனவர்கள் வருகை, புண்ணிய வழிபாடு, உடல் ஒட்டிய ரோகம்.

**இடபம்:** கீர்த்தியான தொழில், மனநிறைவு, வாகன சுகம், சகோதரர் ஆதரவு. புண்ணிய வழிபாடு, புகழ் தேடி வரும், வெளியூர் பயணம், பிரிந்த காதலர் ஒன்று சேரல்.

**மிதுனம்:** விண்விரயம், இரக்க சிந்தை, வாகன லாபம், தடைப்பட்ட பணம் கிடைக்கும், மாதா பிதா வழியில் மகிழ்ச்சி, உத்தியோக சிறப்பு.

**கடகம்:** மனக் கிலேசம், வாகன நஷ்டம் திருடர் பயம், மாதா வழி கவலை, வாக்கு சாதுரியம். தொழில் மூலம் இடமாற்றம், கடற்றொழில் கைத்தொழில் செய்வோர் லாபம்.

**சிங்கம்:** பண விரயம், நெடு நாள் உறவு பகை, தூர தேசம் போனவர்கள் வரவு. வாகன நஷ்டம், பிதா மாதா வழியுதவி, இளைய சகோதர வழி பாசம், திடீர் விவாகம்

**கன்னி:** பிரிந்த காதலர் சேருவார்கள், வாகன சுகம், வணிகர்கள் கடற்றொழிலாளர் அகமகிழ்ச்சி, வெளிநாட்டு செய்தியால் நன்மை, தடைப்பட்ட பணம் வரவு.

**துலாம்:** வாக்குவசீகரம், லட்சுமி கடாட்சம், மூத்த சகோதரர் வழியுதவி, மனமகிழ்ச்சி இனசன வருகை, விருந்துபசாரம், வாகன லாபம், வணிகர்கள் கடற்றொழிலாளர் லாபம்.

**விருச்சிகம்:** மனை பூமியால் நன்மை, உத்தியோக உயர்வு, மங்கள காரியம் விருத்தி, வாகன சுகம் வணிகர்கள், கைத்தொழில் செய்வோர், கடற்றொழிலாளர், இயந்திரத்தொழில் செய்வோர் லாபம். இளைய சகோதரர் வழியில் கவலை.

**தனுசு:** தேக சுகம் பிதா வழி சொத்து, பெண்களால் நன்மதிப்பு பூமிப்பேறு. ஆடையாபரண சேர்க்கை, பணப் புழக்கம், சிநேகிதரால் உதவி, புதுத்தொழில் திடீர் பயணம்.

**மகரம்:** உடல் ஒட்டிய ரோகம். வாகனசுகம், இராஜ மரியாதை. கல்வியால் கௌரவம். பிரிந்த காதலர் சேருவர் அயலவர்களால் உதவி. வெளிநாட்டு பயண நன்மை.

**கும்பம்:** விவாக சோபனம். வாகன சுகம், இனசன மகிழ்ச்சி, விருந்துபசாரம், தூரப்பயணம், நிறைவு, பிரிந்த காதலர் சேருவர், புதுத்தொழில் மூலம் மன நிறைவு.

**மீனம்:** சத்துரு பயம், பொருள் நஷ்டம், பிதா வழி சொத்து. உடல் ஒட்டிய ரோகம், மாதா பிதா வழியுதவி, மாமன் வழியில் பகை, புத்திரரால் உதவி, வாகன சுகம்.

# இந்துபோர்ட் இராசரத்தினம்

## காலமும் வாழ்வும்

### 13

### அனுதைகள் இல்லம்

சபாபதியார் மாளிகை போன்ற மேல்மாடியின் வைர மான வேப்ப மரங்கொண்ட மைத்து ஏழைப் பிள்ளைகளை அங்கே ஓடி விளையாடவைத்து உணவு உடையளித்து உறங்க வைத்தார். பிறர்பிள்ளை தலை தடவத் தன்பிள்ளை தானே வளரும் என்ற நாகரிகத்தை சபாபதியார் நன்கு அறிந்த வர். அவர் தமது மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகளை ஏழைப்பிள்ளைகளுக்கு உண வூட்டப் பழக்கியவர். அந்த வகையில் அவரின் பேரக்குழந் தைகள் மண்சோறுக்கி விளை யாடாமல், மெய்யாய் மெய் யாய்ச் சோறுக்கித் தங்கள் விளையாட்டுத் தோழர் தோழி களுக்கு ஊட்டியவர்கள் இங் ஙனம் இளமையிலேயே ஏழை களுக்குச் சமையல் புரிந்த ஒருவர் திருவாட்டி குழந்தை யம்மா குமாரசாமி என்பவ ராவர். திருவாளர் குமாரசாமி அந்தக் காற்றுப்பட்டமையாற் போலும் சைவவித்தியாவிருத் திச் சங்கத்தின் இயக்குநரா கவும் பிற்காலத்தில் கடமை யாற்றியுள்ளார்.

சபாபதிப்பிள்ளை அவர்கள் தம்மனையில் ஆரம்பித்த சைவச் சிறுவர் இல்லத்தைச் சைவ வித்தியா விருத்திச் சங் கத்தார் 1928 ஆம் ஆண்டு விஜயதசமி நாளில் பொறுப பேற்றுநடத்தத்தொடங்கினர் கள். அன்று தொடக்கம் சைவப் பெரியார் இராசரத்தி னம் அவர்கள் எண்ணற்ற பிள்ளைகளுக்கு அப்பு ஆனர்.

சைவப்பிரபுக்கள் அநாதை கள் மேலிரங்கி ஆளுக்கு ஒரு பிள்ளையையாவது வளர்க்கக் கை கொடுக்கலாம் என்று சங் கத்தார் வேண்டுகோள் விடுத் தார்கள். அன்றிப்போதுவாகப் பொங்கலுக்குத் தண்டும் முறையில் நெல், அரிசி, தேங் காய், காய்கறி ஏதாவது கொடுங்கள் என்றிரந்தார் கள். உடுக்கத் துணி உதவுங் கள் என மெலிந்து கேட் டார்கள்.

பிள்ளைகள் கல்வியோடு கைத்தொழில் ஒன்றைக் கற் றுக் கைவினைகரவாது கவலை யின்றி வாழ்வதற்கு வழிகாட் டினர்கள். விவசாயம், நெசவு, அச்சுக்கலை, தச்சுவேலை இவற் றில் ஏதாவது ஒரு துறையின் அபிவிருத்திக்குப் பொது மக் களிடம் உதவி கோரினர்கள். அந்தக்காலத்தில் 1928 ஆம் ஆண்டளவில் ஒரு பிள்ளைக்கு மூன்றுவேளை மூக்கு முட்ட உணவும் தலைக்கு எண்ணெ யும் பிறவும் கொடுத்துப் பேணி வளர்ப்பதற்கு எட்டு ரூபா ஐம்பது சதம் வரையில் செலவாகும் எனப் பரிந்து கேட்டார்கள்.

உமாதேவியாரான அம்மை யும், சிவபெருமானன அப்ப ருமே உலகுக்கு அம்மை அப் பர். அம்மையே அப்பா என்று சைவத்திருமுறைகள் தோத்தி ரஞ் செய்கின்றன. அப்பனு கிய இறைவன் தாயாக எளி வந்து உயிர்களைக் காப்பாற்று பவர். அவர் உயிருக்கு உயிர். ஊனுடம்புக்குத் தாய் தந்தை யர் இல்லாதவர்கள் உயிருக் குயிரான இறைவன் இருக்கும் போது அனுதைகளாகார். அவர்கள் சிவன்பிள்ளைகளா வர் சிவன்பிள்ளைகள் வாழும் இடம் சைவச் சிறுவர் இல் லம். சைவ சமயத்தவர்களின் மெய்யடியார்களான தனியடி யார்கள் அறுபத்து மூவர் என எண்ணிக் கொள்ளும் வண் ணம், அங்கே 63 பிள்ளைகள் கூடினர் அவர்களுள் சிலர் ஆசிரியர் பயிற்சி பெறுவதற் குப் போதிய கல்வி பெற்று பிரவேச வகுப்பிற் கற்று வந்த வர்களாவர். புற மதத்தவர் வலையில் அகப்படக்கூடிய பரு வத்தவர்களுள் பயிற்சி மாணுக்கர் பருவமும் ஒன்று கும்.

அறுபத்து மூவருக்கு மேலும் பெருந்தொகையினராக வர விருந்தவர்கள் பலருக்குப் போதிய இடவசதியில்லாமல் தடைப்பட்டிருந்தனர். வந்த பிள்ளைகள் ஆரம்பத்தில் சபா பதிப்பிள்ளையார் செல்வமனை யில் செல்லப் பிள்ளைகளாக ஓடித்திரிந்தமை பெரியாருக் குப் பேருவகையளித்தது.

தோன்றுத்துணையாக எங் கும் நிறைந்து எல்லாவற்றை யும் இயக்கி ஆட்டி ஆடல் புரியும் எம்பெருமான் திருவரு ளாலும் சபாபதிப்பிள்ளையா ரின் தூண்டுதலாலும் சிந்தை மகிழ்ந்த திருநெல்வேலி கந்தையா அவர்களும் அவர் தம் பாரியாரும் ஒரு ஏக்கர் நிலப்பரப்பைச் சைவச் சிறுவர் இல்லம் அமைப்பதற்குப் பூதா னமாகப் பூரித்த மனத்தோடு உவகை பூப்ப உறுதி எழுதி அறுதியாகக் கொடுத்தார்கள்.

வயிற்றுச் சோற்றுக்காகச் சைவப்பிள்ளைகள் திருநீற்றை அழித்துவிடக் கூடாது என் னும் கோட்பாடு கொண்ட சபாபதியார் ஏழைகளின் வாழ்வுக்காக எதனையும் கொடுக்க ஆயத்தமானர். காணி வாங்குதல், உறுதி எழுதுதல், கொட்டிலமைத் தல், கட்டில் இடுதல், உணவு கொடுத்தல் எதற்கும் அவரின் வலது கை தருகையாக நீண் டது. தருகை நீண்டவன் தசரதர் என்பது கம்பாராமா யணம். தருகை நீண்டவர் சபாபதியார் என்பது எங்கள் வரலாறு.

### சைவாசிரிய கலாசாலையின் தோற்றம்

சைவவித்தியா விருத்திச் சங்கம் ஊர்கள் தோறும் சைவவித்தியா சாலை களை ஆரம்பித்து நடத்தி வந்த காலத்தில் ஆங்காங்கே வந்து குவிந்த சைவப்பிள்ளை களுக்குக் கற்பித்தற்குச் சைவாசாரமுள்ள ஆசிரியர் கள் போதிய அளவிற்கிடைக்க வில்லை.



அட்வகேட்
ரி. இராசேந்திரா

காரைநகர் சங்கரப்பிள்ளை அருணாசலம் அவர்களின் முயற்சியால் முன்னர் 1916-ம் ஆண்டு முதல் 1920 ஆம் ஆண்டு வரை கோப்பாய் நாவலடியில் நடத்தி வந்த ஐக்கிய போதன பயிற்சிக் கலாசாலையில் ஓரளவுக் குட் பட்ட சைவாசாரசீலமுள்ள ஆசிரியகள் பயிற்றப் பெற் றார்கள்.

பின்னர் சேர். இராமநாதன் அவர்கள் பரமேஸ்வராக் கல் லூரி அமைப்பதற்கென இரு பாலையில் வாங்கிவிட்ட காணியில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை 1923ஆம் ஆண் டில் ஆரம்பிக்கப் பெற்றது. அங்கே 1926-ஆம் ஆண் டில் கூடுதலான ஆசிரி யர்கள் பயிற்சி பெற்றார்கள். அவ்வாண்டில் அங்கே பயிற்சி பெற்றவர்களிற் பார்க்க மேலும் ஒரு சிலரைப் பயிற் றித் தருமாறு சைவவித்தியா விருத்திச்சங்க முகாமையா ளர் இராசரத்தினம் அவர்கள் கல்விப்பணிப்பாளரைக் கேட்ட போது, இடவசதிக் குறைவு காரணமாக அது நடைபெறவில்லை.

இந்நிலையில் இராசரத்தினம் அவர்கள் தாங்களே தங்கள் சைவப் பாடசாலைகளிற் கற் பித்தற்குத் தேவையான சைவாசிரியர்களைப் போதி யளவு தங்கள் சூழலிலேயே பயிற்றிக் கொள்வதற்கு ஆலோசித்துத் துணிந்தார் கள்.

சைவாசிரியர்களைப் பயிற்று வதற்கு ஆசிரிய கலாசாலையை ஆரம்பித்தல் வேண்டும், எங்கே ஆரம்பிக்கலாம் என் றெல்லாம் இராசரத்தினம் அவர்கள் அல்லும் பகலும் சிந்தித்துக் கொண்டிருந்தவே ளையில், ஒரு நாள் காரைநகர் அருணாசலம் அவர்களின் மைந் தன் சிவபாதம் என்பவர் அழுத வண்ணம் வந்தார்.

''நான் உயரம் இல்லாத ஆள் என்பதற்காக ஆசிரிய கல்லூரித் தெரிவுக் குழுவினர் என்னைத் தெரியவில்லை'' என்று கூறிய அவர் பின்னும் விம்மி விம்மி அழுதார் அவ ரைக் கண்டு மனமுருகிய இராசரத்தினம் அவர்கள் தம்மை மறந்து சிறிது கோபத் தோடு ''அருணாசலம் ஐயா வின் மைந்தனுக்கும் உயரம் வேண்டுமமோ? பொறு. நான் ஆசிரியகலாசாலை ஆரம்பிக்கப் போகிறேன். நீ அங்கே சென்று படி'' என்று வாக் குக் கொடுத்தார்.

சைவாசிரியர்களும் பயிற்சி வசதி பெறுவதற்கு வசதியா கக் கோப்பாயில் ஆரம்பிக்கப் பெற்ற ஐக்கிய போதன பயிற் சிக் கலாசாலை, பரீட்சார்த்த மாக நடைபெற்றதேயல்லா மல், பரிகாரமாக நிலவியதா கத் தெரியவல்லை என்பது இராசரத்தினம் அவர்களை வெகுவாக வாட்டி வந்தது. பின்னர் அரசினர் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியும் போதி யளவு சைவாசிரியர்களை பயிற்றவில்லை என்பதையும் நினைத்தார். சைவசமயத்தவர் களுக்குச் சொந்தமாக ஒரு பயிற்சிக் கலாசாலை இன்றி யமையாதது. அமைய வேண்டும் எனத் திடமாகக் கருதினர். அவ்வாறே முன்னர் கல்விப்பணிப்பாளரும் கருத்துத் தெரிவித்துப் பணித் தமையை நினைவு கூர்ந்தார்.

சைவாசிரிய கலாசாலையை எவ்வாறு உடனடியாக ஆரம் பிக்கலாம் அதை எங்கே ஆரம்பிக்கலாம் என்று இராசர் சிந்திக்தவேளை யில் திருநெல்வேலியில் தாராள மனம் படைத்த செல்வப் பிரபு ஒருவர், ''என்னுடைய வீடு இருக்கி றது'' என்று அபயக் குரல் கொடுத்தார். மலேசியாவில் துவிபாசகர் என்னும் முதலி யார் உத்தியோகம் பார்த்த தம்பையா அவர்களின் மைந் தர், சிமை அப்புக்காத்தர் என்னும் பரிஷ்ரர் இராசேந் திரா தம் மாளிகை போன்ற பெரிய மனையை உடன் தேவைக்கு உதவினர். அம் மனை பின்னுளில் தம்பி அன் கோ என்னும் நிதி நிலையமாக வும் புகழ் பெற்றது.

இன்று யாழ்ப்பாணத்தில் கூடும் காலைச் சந்தைகளுள் பெருந்திரளான மக்கள் விற் கவும் வாங்கவும் வந்து கூடும் பெருந் சந்தைகளுள் திருநெல் வேலிச் சந்தை ஒன்றுகும். பழைய நாளங்காடிகள் வரி சையில் வைத்தெண்ணப்படும் இச் சந்தையின் நிலமும் இரா சேந்திரா அவர்களுடையதே யாம்.

சைவாசிரிய கலாசாலையின் ஆரம்ப வகுப்புகள் 1928 ஆம் ஆண்டு விஜயதசமி நாளில் ஆரம்பித்து நடைபெற்று வந்த காலத்தில் நிரந்தரமான பெரிய கட்டடங்கள் அமைப் பதற்கு நிலம் வாங்குவதற்கு இராசரத்தினம் அவர்கள் முயற்சி செய்த வேளையில் உதவியாளர்கள் தாமே முன் வந்தார்கள். அந்த வரிசையில் வந்த பெரியவர்கள் பலர் அவர்கள் எல்லோரும் பெரும் பரோபகாரிகள். திருநெல் வேலி தந்த செம்மனச் செல் வர்கள். புகழ் பூத்த திருநெல் வேலியில் சைவாசிரிய கலா சாலை தோன்றியதும், அக்கலா சாலையை வலம்வந்து போகும் பாதைக்குக் கலாசாலை வீதி எனப் பெயர் வந்ததும் வர லாற்றுக்குரிய நிகழ்ச்சியா யிற்று.

சைவாசிரிய கலாசாலை ஆரம்பிக்கப்பெற்ற விஜயதசமி நாளில் பயிற்சி பெற வந்தி ருந்த இளைஞர் கூட்டத்தில், காரைநகர் அருணாசலம் அவர் களின் மைந்தன் சிவபாதம் என்பாரும் ஒருவர் அடுத்த ''ஆண்டில் பயிற்சி பெறும் நோக்கத்தோடு பிரவேச வகுப்பிற் சேர்ந்து படிப்ப தற்கு அன்று எண்பத்தொரு வர் கூடியிருந்தார்கள் என்றால் சைவத்தின் ஆர்வம் தலை தூக் கியது என்றே கருதல் வேண் டும்.

### க.சி.குலரத்தினம்

சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் தாபகரும் தலைவரு மான சேர் இராமநாதன் அவர்கள் பரமேஸ்வராக் கலா சாலையில் இன்ரர் ஆட்ஸ், இன்ரர் சயன்ஸ் என்னும் லண்டன் பல்கலைக்கழகத்து இடைநிலைத் தேர்வுக்கான வகுப்புக்களையும் அங்கே நடத்த ஒழுங்கு செய்தார். கல்லூரி மாணக்கர்கள் காலை யில் வழிபாடு செய்வதற்காக அவர் அமைத்த பரமேஸ்வரம் பெரிய ஈஸ்வரமாகிக் கும்பாபி டேகமும் 1928 ஆம் ஆண்டில் நடைபெறலாயிற்று. செம் பாடு எனப் பெயர் பெற்ற செம்மண் தறையில் வேம்பும் பனையும் நிரம்ப வளர்ந்து வளம் கொடுத்த பெரு நிலப் பரப்பின் உரிமையாளராயி ருந்த திருவாட்டி பொன்னுப் பிள்ளை வல்லிபுரம் என்னும் மூதாட்டி பெருமனம் படைத்த செம்மனச் செல்வி யாவர் அவரின் பெண்களை மணந்திருந்த பொன்னம்பலம் என்னும் வல்லிபுரம் பொன் னம்பலம் அவர்களும், சின்னப் பிள்ளை வெற்றிவேலு என்பவ ரும், சைவாசிரிய கலா சாலைக்கு நிலம் கொடுக்கச் சித்தமாயிருந்தார்கள். இவர் களின் சித்தத்தைத் திருத்தித் திசை திருப்பியவர் காசிப் பிள்ளை என்னும் பெரியாரா வர் காசிப்பிள்ளை அவர்கள் சிவயோக சுவாமிகளின் நெருங்கிய சீடர்.

நாற்பது பரப்பளவில்பரந்த நிலப்பரப்பில் ஒருபகுதி இல வசமாகக் கிடைத்துவிட்டது. ஒருபகுதியை மிகமலிவாக வாங்குவதற்கு வைத்தியர் சபாபதிப் பிள்ளை அவர்கள் முன்வந்தார். பூமிதானம் செய்வதால் வரும் புண்ணியப் பேற்றை நன்கு விளக்கிய சபாபதியாரின் முயற்சியால் மேலும் ஒரு பகுதி இலவசமாகக் கிடைத்தது. அடுத்த நிலப்பரப்பையும் இலவசமாக அப்பிக் கொள்வதற்கு விரும் பாத சபாபதியார், அதற்கான மலிவு விலையைத் தாமே கொடுத்ததோடு சகல உறுதி களையும் தாமே செலவு கொடுத்து எழுதி உபகரித் தார். சைவாசிரிய கலாசாலை யும் சைவச் சிறுர் இல்லமும் ஆரம்பிக்கப் பெற்றுத் தீவிர மாகப் பணியாற்றி வந்த காலத்தில் தமிழ் பேசும் பிர தேசங்களிலிருந்து சைவப் பிள்ளைகளும், இளைஞர்களும் திருநெல்வேலியைப் புகலிட மாகக் கொண்டு நாள்தோறும் வந்து திரண்டனர். இங்ஙனம் திரண்டவர்கள் வந்த வரலாறு கள் சுவையானவை.

வவுனியாவைச் சேர்ந்த இளம் சகோதரர்கள் இருவர் தெல்லிப்பழையில் ஏழாம் எட்டாம் வகுப்புகளிற் படித்து வந்தார்கள். எட்டாம் வகுப்பு வரை எவ்வித மாற்றமுமின் றிப் படித்தவர்கள், அதற்கு மேல் என்றன்ஸ் என்னும் புகு முகத் தேர்வு வகுப்புப் படிப்ப தாயின் கட்டாயமாக மதம் மாறியவர்களாயிருந்தல் வேண்டும் என்பது வழக்கமா யிருந்தது.

வவுனியாச் சகோதரர் மதம் மாறுவதற்கு மனமில்லாமல் இரவிரவாக வேறு சிலரையும் அழைத்துக் கொண்டு மதிலே றிக் குதித்து வெளியேறினர் கள். தொடர்ந்து படிப்பதற்கு என்ன செய்யலாம். எனச் சிந்தித்த தந்தையார், பிள்ளை களையும் அழைத்துக் கொண்டு யாழ்ப்பாணஞ் சென்று பட்ட ணப்பக்கத்தால் போன போது, சைவாசிரிய கலாசாலை யில் அக்காலத்தில் பேராசிரி யாயிருந்த வவுனியா வாசி யாய பண்டித இராசையனர் அவர்களை இடைமறித்து, எங்கே போவதாகக் கேட் டார்.

### வவுனியா தந்த வ. சு. இராசையனர்

மதம் மாறுமல் மேற்படிப் புப் பெறுவதற்கு எங்காம் புகலிடம் என்றுதிரிந்தவர்களை இடைமறித்துக் கேட்ட பண் டிதர், அவர்களை நோக்கி ''நீங்கள் அங்கே, இங்கே அலையவேண்டாம் நேரே நல் லூருக்கு மேற்கில் உள்ள வைமன் வீதிக்குச் செல்லுங் கள். அங்கே பழைய நீதிபதி கதிரைவேற்பிள்ளை அவர் களின் மனையில் இந்துபோட் இராசரத்தினம் என்பவர் இருக்கிறர்'' என்று வழிப்படு த்தி நெறிப்படுத்தி, ஆற்றுப் படுத்திவிட்டார்.

பண்டிதர் இராசையனர் பெரும் புகழ் வய்ந்த வவு னியா தந்த வீரத்தமிழன். எவர்க்கும், எதற்கும் அஞ்சாத ஈர நெஞ்சினன். யாதுங்குறை வில்லாதவர். மும்மொழிப் பாண்டித்தியம் பெற்றிருந்த போதிலும் தனித்தமிழ் பேசிய இலட்சியவாதி. தமிழகத்து மறைமலை அடிகளார் மனையில் நீண்ட நேரம் தனித்தமிழ் பேசி, ஒரு வடமொழிப் பதம் பேச்சில் நுழைந்ததால் ஒரு பெரும் பரிசைப் பெறத் தவ றியவர். சேர். இராமநாதன் அவர் பெருமையை அறிந்து பரமேஸ்வராக் கல்லூரியில் அவரை ஆசிரியராயிருத்திய வர்.

... 12 ஆம் பக்கம் பார்க்க

## நினைவுக்கட்டுரை

# "காலம்" ஆகிவிட்ட க. நா. சு

இறப்பினைக் குறிப்பதற்குத் தமிழ்ப்பண்பாட்டு வட்டத்தினுட் குறிப்பிடப்பெறும் "காலமானார்" எனும் தொடர் நிறைந்த கருத்தினையுடையது: மரணத்தை இப் பண்பாடு எவ்வாறு நோக்குகின்றது என்பதனை அத் தொடர் நன்கு சுட்டுகின்றது. தனக்குரிய காலத்தை நிறைவு செய்து கொண்டு ஒருவர் மரணமடைந்துள்ளார் என்ற பொருளினையும் அவர் (தமது மரணத்தின்பின்) நடந்தேறிய ஒரு "காலம்" ஆகிவிட்டார் என்ற பொருளினையும் அத் தொடர் உணர்த்தி நிற்கின்றது ஒவ்வொரு பண்பாடும் மரணத்தை எவ்வாறு நோக்குகின்றது என்பதை அவ்வப் பண்பாடுகளில் அது பற்றிப் பயன்படுத்தப்படும் சொற்றொடர்கள் மூலம் நன்கு அறிந்துகொள்ளலாம்.

நவீன தமிழிலக்கியச்துறையின் மிகப்பிரசித்தி பெற்ற விமர்சகர்களினுள் ஒருவரான திரு. க. நா. சுப்பிரமணியத்தின் "மறைவு", என்னிடத்து இந்தச் சிந்தனையைக் கிளப்பியதற்கு காரணம் உண்டு.

அவர் நவீன தமிழிலக்கிய விமரிசனத்தில்இலட்சியவாத, மார்க்ஸிய விரோதக்கருத்து நிலையைக் கொண்டிருந்தவர். அவரது விமரிசன நோக்கினை நான் முற்று முழுதாக மறுதலித்தவன். அவர் இலக்கியத்தை அணுகிய முறைமை எனது கருத்து நிலைக்கு முரண்பாடானது. நவீன இலக்கிய விமரிசன வரலாற்றில அவர் சர்ச்சைகள் பலவற்றைக் கிளப்பியவராகவும், சர்ச்சைக்குரியவராகவும் கொள்ளப்பட்டவர். அவர் பற்றி கைலாசபதி எழுதிய நூல் ("திறனாய்வுப் பிரச்சனைகள்") என் முன்னர் கிடக்கின்றது. கைலாசபதி "காலம்" ஆகிவிட்டான். இப்பொழுது க. நா. சு. வும் "காலம்" ஆகிவிட்டார்.

இந்த இரண்டு இறந்த காலங்களிலும் தமிழிலக்கிய வரலாற்றில் தொடர்ந்தும் எடுத்துப் பேசப்படப்போவது எதுஎன்பதுஎமக்குத்தெரியும்.

ஒருவர் "காலம்" ஆகிவிட்ட பின்னர் அவரை மதிப்பிடுவதற்கும், அவர் வாழும் காலத்தில் அவரை மதிப்பிடுவதற்கும் வேறுபாடு உண்டு. வேறுபாடு இருத்தல் வேண்டும். (தாங்கள் வாழும் பொழுதுள்ள அதிகாரம் அந்தஸ்துகளைப் பயன்படுத்தி மற்றவர்களை விடுத்து தம்மையே எதற்கும் மேற்கோள் காட்டவைக்கும் பல விற்பன்னர்கள் "மறைவின்" பின்னர் மறைந்தே போய்விடுவது நமக்குப் புதிதன்று.)

"காலம்" ஆனவர் காலமானதும் சர்ச்சைகளுக்கு அப்பாலானவராகின்றார். அவர் விட்டுச் சென்றவை தான் சான்று. உண்மையில் தன்னிலிருந்தே விடுவிக்கப்பட்டவராகி "வரலாற்றுப் பொருள்" ஆகிவிடுகின்றார்.

க. நா சுவையும் இன்று நாம் அப்படிப் பார்த்தல் வேண்டும். வாழ்ந்தகாலத்து வாதவிவாதங்களுக்கு (Polemics) அப்பால் வைத்து நோக்கல் வேண்டும்.

அவ்வாறு நோக்கும் பொழுது க. நா. சுப்பிரமணியம் பற்றிய, இலக்கிய வரலாற்று நிலைநின்ற சில முக்கிய உண்மைகள் மேற்கிளம்பும்.

முதலாவதாக எடுத்துக் கூறப்பட வேண்டுவது, அவர் 1930 களில் தமிழின் நவீன இலக்கியத்தினுள் வந்த எழுத்தாளர்களுள் (புதுமைப் பித்தன், கு. ப. ரா, மத்சேரி ஈஸ்வரன், புரசு பாலகிருஷ்ணன், சிட்டி போன்றோருள்) ஒருவர். இவர்கள் பத்திரிகைகள் வாயிலாக வந்தவர்கள் பத்திகைகளில் தங்கள் திறமைகளைக் காட்டியவர்கள். தங்களிற் பலர் பலபத்திரிகைகளை நடத்தியவர்கள். (க. நா. சு. "கிரம ஊழியன்", "சந்திரோதயம்" ஆகியனவற்றின் ஆசிரியராக இருந்தவர்) இவர்கள் மேனாட்டு இலக்கிய உந்துதல் பெற்றுத் தமிழை நவீனமயப்படுத்தியவர்கள்

தங்கள் பணிபற்றிய ஏதோ ஒருவகைத் தரிசனத்துடன் வந்தவர்கள் தொழிற்பட்டவர்கள் மணிக்கொடி இவர்களிற் பலரை உள்ளடக்கி நின்றது. அந்தத் தரிசனம் காரணமாக இவர்கள் படைப்பாளிகளாகவிருந்த அதே வேளையில் விமர்சகர்களாகவுமிருந்தவர்கள். அந்த விமரிசனத் திறமையினாலேயே தான் இவர்கள் பாரதியை மகாகவி என நிலைநிறுத்தினர்.

அந்தப்பரம்பரையின் ஆங்கிலப்பரிச்சயம் அதிகமுடையவராகவிளங்கியவர். க.நா.சு. எனலாம். தமிழிலும் ஆங்கிலத்திலும் சமமான வன்மையுடன்எழுதும் ஆற்றல் வாய்ந்தவர். நவீன தமிழிலக்கியத்தைப்பற்றி ஆங்கிலத்தில் எழுதி அனைத்திந்திய நவீன இலக்கியக்காரர் மட்டத்தில் தமிழின் நவீன இலக்கிய வளம் பற்றித் தெரிய வைத்தவர். அவர்தமது வாழ்வின்வளமிக்க பகுதியை இப்பணி காரணமாக தில்லியிலேயே கழித்தவர்.

**பேராசிரியர் கா.சிவத்தம்பி**

ஆங்கில இலக்கியவிமரிசனப் பார்வையில் தமிழிலக்கியத்தைக் குறிப்பாக தமிழ்ப்புனைகதைகளையும், புனைகதையாசிரியர்களையும் பார்க்கும் ஒரு விமரிசன மரபினைக் க. நா. சு வளர்த்தார் என்று துணிந்து கூறலாம். அந்த விமரிசன மரபு சமூக உள்ளீட்டிலும் பார்க்க ஆக்க நுணுக்கங்களை இனங் காண விரும்பிய ஒன்றாக அமைந்தது.

ஐ நா. ஆங்கில விமரிசன மரபினை அறிமுகஞ்செய்தவர் என்னும் பொழுது, ஆங்கில விமரிசனப் புலமையாளர் மரபிற் சென்று விமரிசனஞ் செய்தவரென்பதன்று அவர் ஆங்கில மரபில் காத்திரமான சஞ்சிகைகளில், பத்திரிகையியலுடன் இணைந்து தொழிற்பட்ட ஒரு விமரிசன மரபினையே கையாண்டு வந்தார் எனலாம்.

இதன் காரணமாக அவரிடத்துக் கருத்து நிலைச் சார்பு ஒன்று இருந்ததே தவிர, கருத்துநிலை இறுக்கம் (அதாவது ஒரு குறிப்பிட்ட கருத்து நிலையின் ஆழமான புலமை ஆய்வுகளுக்குட் செல்வது) இருக்கவில்லை.

க. நா. சுவின் ஆங்கில இலக்கிய சார்பு நோக்கு அவரை நவீன தமிழிலக்கியத்தின் நவவேட்கை வாதிகளின் (avant-garbist) ஞானபிதா ஆக்கிற்று.

ஆனால் க. நா. சுவின் நின்று நிலைத்த ஆற்றல் அவரது நாவலிலக்கியத்திறனாகும். "பொய்த்தேவு" என்னும் அவரது நாவல். தமிழின் மிகச் சிறந்த நாவல்களுள் ஒன்று என்பது என் அபிப்பிராயம். இந்தத் திறமை அந்தந்தத் தலைமுறை எழுத்தாளர் பலரிடத்துக் காணப்பட்டதாகும். க.நா. சுவிடத்து அத்திறமை மிகத்துல்லியமாகக் காணப்பட்டது எனலாம்.

தமிழின் பழமை வழியாக வராது, நவீன இலக்கிய நிலை நின்றதன் காரணமாக, இத்தத் தலைமுறையினர் தமிழ்க் கவிதை மரபில் ஒரு மாற்றத்தை வேண்டி நின்றனர் "வசன கவிதை" என்று தொடங்கிய அந்த இயக்கம் தான் இன்றைய புதுக்கவிதையின் வாயில் 'வசன கவிதை" காலம் முதல் புதுக்கவிதைக் காலம்வரை அந்த மாற்றத்துக்கு தன் விமரிசன ஆற்றலாகவும், புதுக் கவிதைகாரலும் ("மயன்" என்ற பெயருடன்) வழிகோலியவர்களுள் க. நா சுவுக்கு ஒரு முக்கிய இடம் உண்டு

திறந்த நிலைப்பாடுடைய ஒரு விமரிசன மரபை விரும்பியவர் க. நா. சு இதனால் அவர் தன் "கட்சி"யினருடனேயே பல தடவைகளிற் கருத்து வேறுபாடு கொண்டதுண்டு க. நா. சுவின் இலக்கியக் கொள்கை மாக்ஸ எதிர்ப்பு நிலை கொண்டது ஆனால் அந்த எதிர்ப் பெழுத்துக்களினால், இன்று பின்னோக்கிப் பார்க்கும்பொழுது ஒரு முக்கிய நன்மையேற்பட்டுள்ளது தெரியவரும் க நா சுவின் வாதங்கள் விமரிசனப் போக்குகளை மறுதலிக்க முனைந்த மார்க்ஸிய விமர்சகர்கள் தங்கள் நிலைப்பாட்டைக் கூர்மையுடன் முன்வைத்தனர். கைலாசபதியின் "திறனாய்வுப் பிரச்சனை"களே இதற்கு நல்ல சான்று.

தமிழ் நாட்டின் பல்கலைக் கழக மட்டங்களில் க.நா.சு, சி சு. செல்லப்பா, பிரதிநிதித்துவம் படுத்தும் விமரிசன மரபு கால் கொள்ளவில்லையென எனது ஆய்வுக் கட்டுரையொன்றிற் குறிப்பிட்டுள்ளேன். க நா சு பற்றிய ஒரு கனதியான ஆராய்ச்சியை செய்வதிலாவது அவர்கள் பின் நிற்கமாட்டார்கள் என்றே கருதுகின்றேன். ஏனெனில் தமிழ் நாட்டிலுள்ள ஒருவரால்தான் க. நா. சுவின் எழுத்துக்களை சுலபமாக ஒருங்கு சேர்க்க முடியும்.

க நா சு நமது விமரிசன வரலாற்றில் ஒரு முக்கியமான பெயர். அவர் பெயர் நிற்கும்.

### இரவில்...

.. 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

மறிகடல் ஓரங்களிலும்
மலை முடி வாரங்களிலும்
தனித்திருந்து
உன்
தந்தையோடு
இனித்த கதை பேசி
இதயத்தை
இழந்தவனே!

நீ
சிலுவையில்
தொங்கிய
நேரம் அது!

ஈட்டியால்
ஒருவன்
உன்
இடது
விலாவைத்
திறந்த போது
நீ
காட்டிய
கருணை
இருக்கிறதே
அதற்குக்
கடலைத் தானும்
உவமையாகக்
காட்டலாமா?

உன் வாழ்க்கை
உருகி வழியும்
ஒரு
மெழுகுதிரி.
அரைக்க
அரைக்க
மணங்கமழும்
அழகிய
சந்தனக்கட்டை

இயேசுவே......
இரண்டாயிரம்
ஆண்டுகளுக்கு முன்பு நீ
பிறந்த போது
இரவில் இருந்து
இருளைப் பிரித்து வைத்தாய்

ஆனால்!
இப்போது
பகலே
இருளாகி விட்டது

இறை மகனே
இருளைப் போக்க
எழுந்து வா......

ஒளி நீ
ஓடி வா...

நானிலத்திற்கு
உன்
ஞானஸ்நானம் தான்
தேவை

நாயகனே
நாங்கள் உன்னை
வரவேற்கிறோம்
வா...வா...

08745 JAFFNA

# இஸ்ரேலை அதிரவைத்துள்ள

# அரபாத்தின் ராஜதந்திரம்

நீண்டகால ஆயுதப் போராட்டத்தாலும் வன்முறைகளாலும் பெற முடியாமல் போன வெற்றியை அரசியல் நடவடிக்கைகள் மூலமாகவும் ராஜதந்திரத்தின் மூலமாகவும் பலஸ்தீன விடுதலை இயக்கம் அண்மைக்காலத்தில் பெற்றுக் கொண்டுள்ளது. இவ்வெற்றிகள் சுதந்திர பலஸ்தீன அரசாங்கத்தை அமைக்க முடியுமென்ற நம்பிக்கையை பலஸ்தீன மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இதே வேளையில், இதனால் தான் தனித்துவிடப்படக் கூடிய நிலை ஒன்று ஏற்படலாம் என இஸ்ரேல் அச்சமடைந்துள்ளது. இறுதிவரை இஸ்ரேலுக்கு ஆதரவளித்து அதன் நெருங்கிய நண்பனாக இருந்துவந்த அமெரிக்கா கூட பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தும் நிலை இஸ்ரேல்ஆட்சியாளருக்கு பலத்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

## அமெ. கொள்கையில் ஏற்பட்ட தடுமாற்றம்

பலஸ்தீன விவகாரத்துடன் சம்பந்தப்பட்ட மேற்காசியப் பிரச்சனை தொடர்பான ஐ நா. சபையின் விஷேட கூட்டத் தொடர் இம்மாதம் முதலாம் திகதி முதல் நியூயோர்க்கில் நடைபெறும் என்றே முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் இம் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் வருவதற்கான 'விசா' பலஸ்தீன விடுதலை இயக்க தலைவர் யாஸிர் அரபாத்துக்கு வழங்க முடியாதென அமெரிக்க அரசு திட்டவட்டமாக அறிவித்தது. இதனாலேயே இக்கூட்டத் தொடர் நியூயோர்க்கிலிருந்து ஜெனிவாவுக்கு மாற்றப்பட்டது.




இச் சந்தர்ப்பத்தில் அரபாத்துக்கு விசா வழங்குமாறு பல நாடுகள் விடுத்த வேண்டுகோளை அமெரிக்கா நிராகரித்தது. அப்போது அமெரிக்கா தெரிவித்த காரணம் 'பலஸ்தீன விடுதலை இயக்கம் இன்னும் ஒரு பயங்கரவாத இயக்கமாகவே உள்ளது" என்பது தான். "இதற்கான சரியான சான்றுகள் எம்மிடம் உள்ளதால் அரபாத்தை அமெரிக்காவில் அனுமதிக்க முடியாது" என்றும் அமெரிக்க அதிகாரிகள் கூறினார்கள்.

ஆனால், அமெரிக்கா இவ்வாறு அறிவித்த ஒரு மாத காலத்திற்குள்ளேயே பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் நேரடியான பேச்சுவார்த்தையை நடாத்த வேண்டிய நிலை அதற்கு ஏற்பட்டுள்ளது. இது பலஸ்தீன மக்களின் நீண்ட நாள் போராட்டத்திற்கு கிடைத்த வெற்றி என அரபு நாடுகள் வர்ணித்தன. ஆனால் யூதர்களுக்கு இது ஒரு துன்பமான "கறுப்பு நாள்" என இஸ்ரேலிய பிரதமர் அறிவித்தார்.

## அமெரிக்க அரசின் மூன்று நிபந்தனைகள்

யாஸிர் அரபாத்தின் ஐ.நா. உரை தொடர்பாக வாஷிங்டனிலிருந்து முதலில் வெளியான அறிக்கைகள் அதையிட்டு அதிருப்தியையே தெரிவித்தன. அரபாத் விடயங்களை தெரிவித்திருந்தாலும் அவை திருப்திகரமாக இல்லை என்றே அமெரிக்காவிலிருந்து முதலில் வெளியான தகவல்கள் தெரிவித்தன. ஆனால் அதற்கு மறுநாள் அமெ. வெளியுறவு அமைச்சர் ஜோர்ஜ் சுல்ஸ் வெளியிட்ட அறிக்கை அதற்கு விரோதமாகவே இருந்தது.

அரபாத்தின் உரையை பார்க்கும் போது பலஸ்தீன விடுதலை இயக்கம் அமெரிக்காவை திருப்திப்படுத்தக் கூடியளவுக்கு இறங்கி வந்து விட்டதென்பதையே எடுத்துக் காட்டுவதாக சுல்ஸ் குறிப்பிட்டார். பலஸ்தீன விடுதலை இயக்கத்தை ஏற்றுக் கொண்டு அதனுடன் பேச்சு நடத்த அமெரிக்கா விதித்திருந்த மூன்று நிபந்தனைகளையும் அரபாத் தனது உரையில் ஏற்றுக் கொண்டிருந்தார்.

இஸ்ரேலையும், இஸ்ரேல், தொடர்ந்து இருப்பதையும் ஏற்றுக்கொள்ள வேண்டும, மேற்காசியப் பிரச்சனை தொடர்பான ஐ. நா. சபையின் தீர்மானங்கள் 242,338 ஆகியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்; வன்செயல்களைக் கைவிடவேண்டும் என்பனவே அமெரிக்காவின நிபந்தனைகள்.

இவற்றை அரபாத ஏற்றுக கொண்டுள்ளதால பலஸ்தீன விடுதலை இயக்கம் மீதான பதின்மூன்று வருடகால "தடை"யை நீக்குவதாக

**'ஆர்பி'**

அமெரிக்கா அறிவித்தது. பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் உடனடியாக பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு ரியூனிஸிலுள்ள அமெரிக்க தூதர் கேட்கப்பட்டார்.

## ரியூனிஸில் நடந்த பேச்சுவார்த்தை

பதின்மூன்று வருடகாலத்தின் பின்னர் அமெரிக்காவுக்கும்

... 13 ஆம் பக்கம் பார்க்க

# நம்பிக்கை நாணயத்தின் சின்னம் - ஷப்ரு



எமது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
உளம் கனிந்த நத்தார் வாழ்த்துக்களை
மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## 'ஷப்ரு' தரும் புதிய வட்டி வீதங்களை கூர்ந்து நோக்குங்கள்!
## ஆகா பிரமாதம் பரமதிருப்தி என்றே ஆனந்திப்பீர்கள்!

### நிலையான முதலீட்டுத் திட்டம்

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

### நிறுவனத்தின் நிதி நிலை விபரம்

| | 1984 → 85 | 1985 → 86 | 1986 → 87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4.365,000 | 5,917,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,385,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577.482 |
| வங்கிக் கடன்கள் | 1.791,516 | 8,283.816 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206.887 | 25,811.712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827.514 | 8,505,201 | 16,880,875 |
| வரி செலுத்துமுன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரி செலுத்தியபின் தேறிய லாபம் | 1.356.206 | 1,372.825 | 2,330.012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

### பணிப்பாளர் சபை

திரு. எஸ். பி. ஈ. கருணாரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான் (தலைவர்)
திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
A. I. B. (Lond), முகாமைப் பணிப்பாளர்
திரு. ஜே. டி. நவரட்ணம்,
A. I. B., (Lond), பொது முகாமையாளர்
திரு. ஏ. எம். எச். பாரி,
B. A. (Hons)
திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

### முதலீட்டுப் பாதுகாப்பு

ஷப்ருவின் உறுதியும் அபரிதமான வளர்ச்சியும்
உங்கள் முதலீட்டின் பாதுகாப்பை
உறுதிப்படுத்துகின்றன.
வங்கியியலிலும் நிதியியலிலும்
சிறந்த தகைமையும் அனுபவமும் உள்ள
எமது முகாமையாளர்களின் நிர்வாகத்திறன்
அதை மேலும் உறுதிப்படுத்துகிறது.

### சிறந்த வருமானம்

ஷப்ரு கவர்ச்சிகரமான வட்டி வீதங்கள்
பல்வேறு விசேட சலுகைகளையும்
வசதிகளையும் வழங்குகின்றது.
உங்கள் தேவைக்கேற்ப வட்டியை
மாதாந்தம், காலாண்டில் அல்லது முதிர்ச்சியில்
பணமாகவோ, காசோலையாகவோ அன்றி
வங்கிக் கணக்கூடாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

### திறமையான சேவை

வாடிக்கையாளரின் வெற்றியும் திருப்தியுமே
எமது பிரதான நோக்கமாகையால்
அவர்களின் கோரிக்கைகளையும், தேவைகளையும்
சிநேகபூர்வமாக உடனுக்குடன் கவனித்து
திறமையான சேவைகளை வழங்குகின்றோம்

**SHABRA UNICO FINANCE LIMITED**
61, BAUDDHALOKA MAWATHA, COLOMBO 4. TEL 589310, 500576.
**ஷப்ரு யுனிக்கோ பினான்ஸ் லிமிட்.**
யாழ் முகவர்: 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 22073 - 24805

## கிறிஸ்மஸ் நற்சிந்தனை

அன்புக்கு இருக்கும் மகத்தான சக்தியை உணர்த்த அவதரித்தவர் யேசுநாதர். மனிதகுலத்துக்குச் செய்யும் சேவை தெய்வத்துக்குச் செய்யும் சேவை என்பதை அவரது போதனைகள் நமக்கு உணர்த்துகின்றன

உலகமக்கள் அனைவரையும் நமது சகோதரர்களாக மதிப்பதன் மூலமே உலகில் அமைதியை ஏற்படுத்தமுடியும். பகைவனையும் அன்பினாலேயே திருத்த முடியும். தீமையைத் தீமையால் வெல்லமுடியாது. தீமையை நன்மையால்தான் வெல்லமுடியும் என்பதை யேசுநாதரின் போதனைகள் மூலம் நாம் அறிகிறோம்.

நாம் நமது நோக்கத்தை நிறைவேற்ற முற்படுவதால்தான் துன்பங்கள் ஏற்படுகின்றன. நாம் தெய்வத்தின் நோக்கம் எது என்பதை அறிந்து தெய்வத்தின் நோக்கத்தை நிறைவேற்றவும், அதன்படி வாழவும் முற்பட்டால் துன்பங்கள் நம்மை அணுகா.

யேசுநாதர் அவதரித்த புனித தினமாகிய கிறிஸ்மஸ் தினம் எமது உள்ளத்தில் அன்பை மலர்விக்கவும், தெய்வ நினைவுகளால் உள்ளத்தைத் தூய்மை செய்யவும் உகந்த தினமாகும் பிரார்த்தனையின் மூலமும், தூய அன்பின் மூலமும் யேசுநாதர் அவதரித்த இன்றைய தினத்தைப் பயனுள்ளநாளாக்குவோம்.

## கனிப்பொருள் உற்பத்தி

இரும்பு
— சோவியத் ரஷ்யா
நாகம்
— பெல்ஜியம்
ஈயம்
— ஐக்கிய அமெரிக்கா
வெள்ளீயம்
— மலேஷியா
பொன்
— தென்னாபிரிக்கா
செம்பு
— ஐக்கிய அமெரிக்கா

நா. சுரேஸ்குமார்




## ஔவைப் பாட்டி

பாட்டி நல்ல பாட்டியாம்
பழுத்த தமிழ்ப் பாட்டியாம்
சுட்ட பழம் தன்னையே
சுவைத்த எங்கள் பாட்டியாம்

ஆத்தி சூடி பாடிய
அன்பு நிறைந்த பாட்டியாம்
பேர்த்தி சொன்ன வார்த்தைகள்
பெரிய பெரிய உண்மையாம்

பாலும் தேனும் பருப்புடன்
பாகும் படைத்த பாட்டியாம்
நாலும் கொடுத்துக் கணபதியை
மூன்று கேட்ட பாட்டியாம்

அதியமானெனும் அரசன்
அன்பு வைத்த பாட்டியாம்
நெல்லிக் காயைத் தின்றதால்
நீண்ட காலம் வாழ்ந்தாராம்.

- விழிசைக்குயில்

## பொன் மொழிகள்

✶ தம்மால் இயன்றதைச் செய்ய முயல்பவரும் தம் மனச்சாட்சியின் பிரகாரம் காரியங்களைச் செய்ய முயல்பவரும் சுதந்திர மனிதன்.

— ரூசோ

★ ஒரு மனிதனுடைய இலட்சியம் என்ன என்று அறிந்து கொண்டால் போதும் அதனைக் கொண்டே அவனை அறிந்து கொள்ளலாம்.

— ஹோம்ஸ்

★ எது அழகோ அது எப்பொழுதும் நல்லதாக இருப்பதில்லை. எது நல்லதோ அது எப்பொழுதும் அழகாகவே இருக்கும்.

— ஹொராக்ஸி_சின்

✶ பேசாத வார்த்தைக்கு நீங்கள் எஜமான், பேசிய வார்த்தை உங்களுக்கு எஜமான்.

— ஓர் அறிஞன்

★ உழைப்பு மனிதனை ஏமாற்றுவதில்லை. ஆனால் மனிதன் தான் உழைப்பை ஏமாற்றுகிறான்.

— ரஷ்ய மொழி

★ சொற்கள் வெறும் நீர்க் குமிழிகள், ஆனால் செயல்கள் தங்கத் துளிகள்.

## தேசமும் சின்னமும்

அவுஸ்ரேலியா
— கங்காரு
டென்மார்க்
— கடற்கரை
எகிப்து
— தாமரை
சீனு
— நாசிசஸ்
இங்கிலாந்து
— ரோஸ் (Rose)
பிரான்ஸ்
— வில்லி புஸ்பம்
இந்தியா
— அசோகச் சக்கரம்
மைக்ஸிகோ
— நாகதாழி
பாரசீகம்
— சிவப்பு ரோஸ்
இத்தாலி
— வெள்ளை வில்லி
ஸ்பெயின்
— மாதுளம் பழம்
ஐக்கிய அமெரிக்கா
— கழுகு
ரஷ்யா
— கரடி
இலங்கை
— வாளேந்திய சிங்கம்

கனகரட்ணம் கேமலதா

## பூந்தோட்டம் அங்கத்தவர்கள்

இலக்கம் 131 தர்சினி பாலகிருஷ்ணன்
வயது 12, வட. இந்து மகளிர் கல்லூரி
பருத்தித்துறை

இலக்கம் 132 சி. ச. வேலாயுதபிள்ளை குமரச்செல்வி
வயது 11, யாழ். இந்து மகளிர் கல்லூரி
யாழ்ப்பாணம்

இலக்கம் 133 சிவலிங்கம் பிறேமதாஸ்
வயது 13, நெல்லியடி மத்தியமகா
வித்தியாலயம் கரவெட்டி

இலக்கம் 134 கந்தையா நிர்மலா
வயது 08, புதுக்குடியிருப்பு சீ.சீ.த.க.
பாடசாலை முல்லைத்தீவு

இலக்கம் 135 நடேசதுரை நவநீதன்
வயது 13, சாவகச்சேரி இந்துக் கல்லூரி

இலக்கம் 136 இராஜலிங்கம் காண்டீபன்
வயது 11, யாழ். இந்துக் கல்லூரி
யாழ்ப்பாணம்

இலக்கம் 137 சச்சிதானந்தன் சுஜீவா
வயது 11, நாவலர் இ. த. க.
வித்தியாலயம் கோப்பாய்

இலக்கம் 138 நவரட்டினசிங்கம் அருணந்தி
வயது 12, ஹாட்லி கல்லூரி
பருத்தித்துறை

இலக்கம் 139 ஷர்மிலி ரேகுணதாசன்
வயது 12, திருக்குடும்பக் கன்னியர் மடம்
யாழ்ப்பாணம்

இலக்கம் 140 யேக்கப் இமாகுலம் கிறிஷ்சாந்தி
வயது 12, வன்னேரிக்குளம் மகா
வித்தியாலயம் கிளிநொச்சி

விலங்குகள் விதம் விதம் : 11

## சிங்கம்

கூட்டம் கூட்டமாக வாழாது சிறு சிறு குடும்பமாக வாழும் இயல்புடைய சிங்கம் இரண்டு வகைப்படும். ஆசியா ஒருவகை, ஆபிரிக்கா ஒருவகை. ஆசிய சிங்கம் அடர்த்தி குறைந்த பிடரி மயிரை கொண்டது ஆபிரிக்கா சிங்கத்திற்கு பிடரிமயிர் அடர்த்தியாகக் காணப்படும். உயரமான மரங்களில் சிங்கம் ஏறாது

சிறு குடும்பமாக வாழும் சிங்கக் குடும்பத்திற்கு தலைவன் ஆண் சிங்கமாகும். தலைவனுக்கு பிடரி மயிர் அடர்த்தியாக காணப்படும். சிங்கம் தனக்கென எல்லையை வகுத்து வாழும். எல்லைக்குள் வாழும் சிங்கம் வேறு சிங்கம் நுழைந்தால் சண்டையிட்டு வெளியேற்றும்.

கதைகளில் காட்டுராஜாவாக வரும் சிங்கத்தின் வேகம் ஐம்பத்தெட்டுக் கிலோமீற்றராகும் சிங்கம் ஒரு சோம்பேறிப் பிராணி ஆண் சிங்கங்களே அதிகமாக சோம்பேறியாக இருக்கின்றன.

வேட்டைக்குச் செல்வதெல்லாம் பெண் சிங்கம் தான் பெண் சிங்கம் கொண்டுவரும் இரையையே ஆண் சிங்கம் உண்கிறது அந்த வேளையில் ஆண் சிங்கம் குளிர்ந்தமர நிழலில் உறங்கிக்கொண்டிருக்கும்.

தாயும் தந்தையும் உணவு உண்ணும் வேளையில் குட்டிகள் அவற்றின் வாயைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டியதுதான். குட்டிகளை விட்டு விட்டுத்தான் உணவை உண்ணும். தாய் தந்தை உணவை அளிக்கவில்லையென்றால் குட்டிகள் உணவில்லாது செத்து விடுவதும் உண்டு.

இலங்கையில் சிங்கம் இல்லை அண்டைநாடான இந்தியாவில் சிங்கம் உள்ளது அங்கு சிரியா, ஈரான் பாகிஸ்தான், சிந்து வழியே தான் சிங்கம் வந்தது. சிங்கம் புலியுடன் கூடிப் பிறக்கும் குட்டி சிங்கத் தோற்றமாக பிடரி மயிருடனும், வரிகளுடனும் காணப்படும். இது லைகர் எனப்படும்.

தி தவபாலன்

## தாவரவியற் பெயர்

| பொதுப்பெயர் | | தாவரவியற் பெயர் |
|---|---|---|
| மா | — | மங்கிபோரா இண்டிக்கா |
| வேம்பு | — | அசாத்திரிக்கா இண்டிக்கா |
| அகத்தி | — | செஸ்பேனியா கிரண்டிபுளோரா |
| ரோசா | — | ரோசா மல்ரிபோலியா |
| மல்லிகை | — | யஸ்மினம் |
| வாழை | — | மியூசா |
| தாமரை | — | நெலும்பியம் |
| இஞ்சி | — | சிஞ்சிபா ஓர்வனுலிஸ் |
| நெல் | — | ஒறைசா சற்றைவா |
| சிமைக்கிளுவை | — | கிளிசரீடியா |
| தேக்கு | — | ரெக்ரோனு கிரண்டிஸ் |
| மூக்குத்திப்பூண்டு | — | திரைடெக்ஸ் புரோக் கம்பைன்ஸ் |
| ஆகாயத் தாமரை | — | பிஸ்ரியா |
| இருதய மலர் | — | அன்ரிக்கோனன் |
| மணிவாழை | — | கனு இண்டிக்கா |
| பூவரசு | — | தெஸ்பீசியா |
| உருளைக்கிழங்கு | — | சொலானம் ருயுபரேசம் |
| இறப்பர் | — | கீவியா பிறலியென்சிஸ் |
| முடக்கொத்தான் | — | காடியோர்ஸ் பேம் |
| வெற்றிலை | — | பைப்பர் பீற்றில் |
| பலா | — | ஆற்ரோகாப்பஸ் இன்சக்ரிபோலஸ் |

★ செ. தயாபரன்

## முரசொலி பூந்தோட்டம்

### அங்கத்தவர் பத்திரம்

முழுப்பெயர்: ..........................................................

வயது: ..........................................................

பாடசாலையின் பெயர்: ..........................................................

கல்விகற்கும் வகுப்பு: ..........................................................

வீட்டு முகவரி: ..........................................................

கையொப்பம்: ..........................................................

மேலுள்ள விபரங்கள் சரியானவை என்று உறுதி கூறுகின்றேன்.

..................... ..............................

திகதி பெற்றோர் / வகுப்பாசிரியர் கையொப்பம்

(பதினன்கு வயதுக்குட்பட்டவர்கள் மாத்திரம் உறுப்பினராகலாம். மூன்று பத்திரங்களை ஒன்றாக நிரப்பி அனுப்ப வேண்டும்)

# தொழில் புரியும் பெண்களின் இல்லறத்தில் பாதிப்பில்லையா

அந்தக் காலம் கடந்து போய் வெகு நாளாகவில்லை. அப்போதெல்லாம் ஒரு பெண் மகவு பிறக்கும். இனிய ஒரு மகளாக, திருமகளாக அவள் வளருவாள். கண்ணின் மணியாக, குடும்ப விளக்காக, பெற்ேறார் அவளைப் பாராட்டிச் சீராட்டி வளர்ப்பார்கள். தந்தை தாய் சொற்படி, "சிறிய கோட்டைத் தாண்டி அறியாது." நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாக, விரைவில் அவள் பருவ மங்கையாகி விடுவாள். திருமணம் ஆனதும், அவள் பெயர் மனைவி. கால தேவனின் கண்ணிமைப் பொழுதில் "ஐயிரண்டு திங்கள்" அவளை ஒரு புனிதப் பிறவியான தாய் ஆக்கிவிடும்.

இன்றும்தான் பெண்குழந்தை பிறக்கிறது. பெற்றோரின் "பொன் குஞ்சு" எனப் போற்றவும் பெறுகிறது. நாளை, வரன் தேட நேருமே. சீதனம் கொடுப்பது எப்படியோ எனும் கிலேசம் மேலிடும். ஆண் சிசு வாய்த்து இருந்தால் சிலாக்கியமாகி இருக்கும், அல்லவா? இவ்வாறு அங்கலாய்க்கும் தாய் தந்தையர் சிலரும் இருக்கத்தான் செய்வர்.

ஆனல் ரதியின் தங்கையான தேவ மகள் இவள் எனும்படியான ரூப லாவண்யமும், "தேனின் கசிவந்த சொல்லி" யருள் ஒருத்தியாக, நினைவில் வரும் தோறும் தெவிட்டாத இனிமை ததும்பும் சுபாவமும் உடைய வெறும் மனோகரக் காட்சிப் பதுமைப் பெருமிதத்தில் அவள் திளைத்த நாள் மலையேறிவிட்டது.

இன்று மகளிர் வாழும் உலகோ சிக்கல்களும் சவால்களும் மலிந்தது. அவளது மனக் கண்முன் இலட்சிய வசையில் தனக்கென வகுத்த கனவு நனவாக வேண்டுமானல், அவள் அவற்றிக்கு ஈடு கொடுக்கும் பல அம்ச ஆற்றல் வாய்ந்தவள் ஆதல் வேண்டும்; இவ்வாற்றல் வெளிப்பாடுகளில் சமநிலை காணும் திறன் படைத்தவளாதல் வேண்டும்.

இதனைக் கருத்தில் இருத்தி, தொழில் பார்க்கும் துறையில் இறங்கியுள்ள இல்லத்தரசிகளைப் பேட்டி கண்டமையின் பெறுபேறுகள் சில இதோ:

ஒரு சிரேட்ட அரசாங்க அலுவலாளரின் புதல்வி, கமலாவுக்கு வயது முப்பத்திரண்டு. படித்த பெண். இப்போது தலைநகரிலுள்ள வெளிநாட்டு வங்கியொன்றில் அவள் வேலை பார்க்கிறாள். அவளுக்குத் திருமணமாகி விட்டது (டாக்டர், எஞ்ஜினியர், சட்ட அறிஞர் போலும்) உயர் தொழில் பார்க்கும் அவளுடைய கணவனுக்கு நல்ல எதிர்கால வாய்ப்புகள் காத்திருக்கின்றன.

தன் வங்கிப் பதவியில் மன நிறைவு காணும் கமலா, அதே சமயம் தனது குடும்ப வாழ்க்கையில் மாமியார் மெச்சும் மருமகள், ஓர் அரும் வாழ்க்கைத் துணைவி, பணி பல புரியும் இல்லத்து அரசி, ஒரு தாலாட்டும் தாய் முதலாம் பலதரப்பட்ட பாத்திரங்களையும் திறம்பட வகிக்கிறாள். அவளை அதீத வளர்ச்சி பெற்ற ஒரு "ஸுப்பர் வூமன்" எனலாம்.

முப்பத்தெட்டு வயதினளான ஷரோனின் எடுப்பான தோற்றம் கவர்ச்சிகரமானது. அவர் பார்க்கும் டாக்டர் தொழிலில் தேர்ச்சியும், பயின்ற இசைக்கலையில் நேர்த்தியும் நன்கு தெரியும். அவரது பெற்றோர் தமது ஒரேயொரு மகளாகிய அவரைத் தொழிலதிபர் ஒருவருக்கு விவாகம் செய்து வைத்துள்ளனர்.

ஒரேவேளையில் ஒருபுத்திரி, தர்மபத்தினி, தாய் ஆகிய பலவும் ஆகிவிட்ட ஷரோனுக்கு வாய்ந்துள்ள வீட்டுப் பணிகளின் சுமை அதிகம் உள்ளபடியாக நிதானித்துப் பார்த்தால், அவர் வைத்தியத் தொழிலிலோ இசைப் பயிற்சியிலோ மனத்துக்கு இசைந்த வண்ணம் ஈடுபடுவதில்லை என்பதுதான் பொருந்தும். கமலாவின் சமையல் பிரமாதம்! கமலாவின் கைவண்ணத்தால் எமது வீடு கைலாயம் ஆகிவிட்டது! இப்படிப் புகுந்த வீட்டாரின் புகழாரங்கள் இடைக்கிடை அவருக்குக் கிடைக்கும்.

இந்த இரு மாதரசிகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போம். கமலாவுக்கு வேலைப்பளு அதிகம். ஆனல், ஷரோன் நடத்தும் வாழ்க்கை எளிமையானது, பாதுகாப்பு மிக்கது.


பேட்டி காணப்பட்ட பெண் மணிகளில் பெரும்பாலானோர் புத்திசாலிகள். திறன் படைத்தவர்கள். கல்வி கற்றவர்கள். ஆனல் வீட்டில் அடைபட்டுக் கிடக்கிறோம். எம்மீது விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் அதிகம். அவை தளர்த்தப்பட்டு இருக்குமாயின் வாழ்க்கைக்கு நாம் எமது பங்களிப்பை அதிகரிக்க வாய்ப்பு உண்டாகும் என உணர்கின்றனர்.

"பிள்ளைகளைப் பொறுத்த மட்டில் நாம் முற்றிலும் கையாலாகாத ஒரு நிலையில் இருப்பதுபோல உணர்கிறோம். இங்குதான் எம்மீது குற்றம் சுமத்துவது சுலபம். நமது குழந்தைகளை வளர்ப்பது தொடர்பான எத்தனையோ கவலைகள் எம் மனதைச் சதா அலைக்கழித்துக் கொண்டு இருக்கின்றன அவர்களோடு போதிய எம் நேரம் கழிகிறதா? எனது குடும்பத்தை

... 13ஆம் பக்கம் பார்க்க

# மங்கையர் மஞ்சரி

## மார்கழி மாதக் கோலம்



இப்பூக் கோலத்தினை மார்கழி மாதத்தில் முற்றத்தில் சாணநீர் தெளித்து அதன் மத்தியில் மாதூவிப் போட்டு நடுவே பிள்ளையார் பிடித்து வைத்துப் பார்க்கும்போது மலர்ந்த பூக்களின் நடுவே பிள்ளையார் இருப்பது மிக்க அழகாக இருக்கும். மாதப்பிறப்பன்றுதான் போடவேண்டும் என்றில்லை. இக்கோலத்தை இடைப்பட்ட நாட்களிலும் போடலாம்.

இக்கோலத்தினை பொதுவாக எதற்கும் போடலாம். வைபவங்களுக்குப் போடுவதனல் வர்ணம் சேர்த்துப் போட்டுக்கொள்ளலாம் வர்ணம் சேர்ப்பது நடுவே உள்ள பூவினை வெள்ளை நிறமாகவும் அதனைச் சுற்றி அமைந்துள்ள முதல் ஆறு பூக்களையும் நல்ல மஞ்சள் நிறமாகவும் அடுத்த நிரையில் அமைந்துள்ள பன்னிரண்டு பூக்களையும் செவ்விளநீர் நிறத்திலும் இடையில் உள்ள வெளிகளைபச்சை நிறமாகவும் நிரப்பி செங்கல்மாவினல் எல்லாப் பூக்களின் இதழ்களையும்கோடு கட்டி பிரித்து காட்டலாம்.

திருமதி நா சோமசுந்தரக் குருக்கள்

## இந்துபோர்ட்...

... 8 ஆம் பக்கத் தொடர்ச்சி

அன்று தமிழ்ப்புலமை அதிகமில்லாத அருணசலம் மகாதேவா அதிபராயிருந்தார். குறும்புத்தனம் உள்ள மாணக்கர்களுள் ஒருவன் ஒருநாள், வேடிக்கையாக நமபார் பதி பதயே என்றதும் பக்கத்தில் நின்ற மாணக்கர் கூட்டம் ஒரே குரலில் அரகரமகாதேவா என்றார்கள். மகாதேவா அவர்களுக்குச் சிரிப்பு வந்தது. "நான் இராசையரிடம் தமிழ்படித்தல் வேண்டும்" என்று கூறிப்போனர்.

இலங்கையில் முதற்பண்டிதர் மட்டக்களப்பு மயில்வாகனர் என்னும் சுவாமி விபுலானந்தா அவர்கள். இரண்டாம் பண்டிதர் வவுனியாவைச் சேர்ந்த சுப்பிரமணியர் இராசஐயனர். அவர் வ. சு. இரா: ஐயனர் என எழுதுபவர். அன்று அவர் சைவாசிரிய கலாசாலையில் விரிவுரையாளராயிருந்தார்.

இவ்வாறக இராசரத்தினம் அவர்களின் வீட்டை அடைந்தவர்களை அவர் வரவேற்று, உபசரித்து மறுநாள் தெல்லிப்பழைக்குச் சென்று விடுகைப் பத்திரம் முதலியவற்றைக் கொண்டு வருமாறு சொன்னர். இவர்கள் தெல்லிப்பழையில் விடுகைப்பத்திரம் பெறுவதற்குத் தடையாயிருந்த வேளையில், உற்றதறிந்த கைத்தொழிலாசிரியராயிருந்த டைசன் என்னும் சிங்களப் பெரியார், மேலதிபராயிருந்த வெள்ளைக்கார அதிபருடன் இதமாகப் பேசி ஆவன செய்தனுப்பினர். பிள்ளைகள் திருநெல்வேலியில் மூத்துத்தம்பி வித்தியாசாலையில் படித்து, சிறுவர் இல்லத்தில் வளர்ந்து, சைவாசிரியர் கலாசாலையில் பயிற்சிபெற்று ஆசிரியராய் உருவாகித், தங்கள் வவுனியாவில் சைவப்பிரகாச வித்தியாசாலை அமைத்துக் கொடுத்து நன்றிக்கடன் தீர்த்தார்கள் சைவாசிரியர்க்கான பயிற்சி இப்பால் இராசேந்திரா அவர்களின் மனையில் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையில் அப்பால் சபாபதிப் பிள்ளை அவர்களின் முயற்சியால் பெறப்பெற்ற பெருநிலப் பரப்பில் பெரிய கொட்டில்கள் அமைக்கப்பெற்று வகுப்புகள் நடைபெற்று வந்தன. பாட நேரம் தவிர்ந்த வேளையில் பாலப் பருவந்தாண்டிய இளைஞர்கள் பலர் தங்கள் மேற்பார்வையாளர் திரு. கோ. தம்பிப்பிள்ளை அவர்களின் தலைமையில், சிரமதானம் செய்து பழகிய சீரிய வாழ்வு சிறப்பிடம் பெற்றது.

தம்பிப்பிள்ளை அவர்கள் தாளம்போட்டு உரத்துப் பாடும்போது, பிள்ளைகள் ஓடி, ஓடிப் பூண்டுகள் பிடுங்குவதும், நாயுண்ணிப் பற்றைகளை வெட்டியொதுக்குவதும், திருநாவுக்கரசுநாயனர் தேவாரப்பாடிப் பாடி உழவாரத் திருப்பணிபுரிந்த செம்மையின் வழி வந்த செயலாயிருந்தது.

இன்னும் இளைஞர் பலர் தமது ஓய்வு நேரங்களில் செய்து பழகிய சிரமதானப் பணி, கட்டடங்களுக்குத் தேவையான ஓடுகளை வீதி வசதியில்லாமையால் நூறு யார் தூரத்தில் பறிக்கப் பெற்ற இடங்களிலிருந்து எடுத்து வந்து உரிய இடத்தில் அடுக்கிவைத்தமையாகும்.

### முதல் அதிபரும் பேராசிரியர்களும்

சைவாசிரிய கலாசாலை சீர் பெற்றுயர்ந்த திருநெல்வேலிச் செம்பாட்டு மண்ணில் செம்மையாக வளர்ந்து வந்தது கிருஷ்ணபிள்ளை என்னும் பெரியார் ஆங்கில ஆசிரியர்க்கான பயிற்சி பெற்றவர் அனுபவம் வாய்ந்த முதலாந்தர ஆசிரியராயிருந்தவர், அவர் பெரிய பாடசாலை யொன்றின் அதிபராக இருந்தவர். இப்போது சைவாசிரிய கலாசாலையின் முதல் அதிபர். அவரே பின்னளில் இன்ஸ்பெக்ரர் கிருஷ்ணபிள்ளை எனப் புகழ் பெற்றவர்.

தனித்தமிழ்ப் பேசும் நல்லிதயம் கொண்ட பண்டிதர் இராச ஐயனர் அக்காலத்தில் பெருந் தமிழறிஞன். ஆசிரியர்களைச் சைவத்தமிழ்ப் பற்றேடு அஞ்சா நெஞ்சினராய் உருவாக்குவதில் பெரும் பெயர் பெற்ற தமிழ் விரிவுரையாளர். அவர் பண்டிதப் பட்டத்தோடு முன்னரே பயிற்றப் பெற்ற ஆசிரியப் பயிற்சியும் வாய்ந்த படிப்பாளி.

அடுத்த பெரியார் தம்பிப் பிள்ளை என்பார் பால பண்டிதப்பட்டமும் பயிற்சி பெற்ற ஆசிரியத் தகுதியும் அனுபவமும் பெற்றவர். இன்னெருவர் இடைக்காட்டைச் சேர்ந்த சுப்பிரமணியம் இராமசாமி என்பவர் இவர் பயிற்றப் பெற்ற நல்லாசியத் தகைமையோடு பண்டிதப் பட்டமும் பெற்ற பைந்தமிழ்வாணர். இடைக்காட்டில் புவனேஸ்வரி வித்தியாலயம் 1925 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பெற்றபோது, சேர். இராமநாதன் அவர்களை மங்கலகரமாக வரவேற்றுப் பேசிய பாண்டித்தியம் வாய்ந்தவர். அங்கே தலைமையாசிரியராயும் இருந்து சைவத் தமிழ் வளர்த்தவர்.

தமிழில் இயல். இசை, நாடகம் என்பன முத்துறைகள். இசைக்கலை தமிழ் நாகரிகத்துக்கு மூலவேர். இசையில்லாமல் தமிழில்லை என்னும் வகையில் அது தமிழோடிணைந்து வளர்ந்து வந்தது பண்டைக் காலத்துப் பௌத்தரும் சமணரும் தமிழ் உலகில் புகுந்தபோது, இசைகாமம் பயப்பது என்று கருதி அதைத் தட்டிக் கொட்டிப் புறக்கணித்து ஒதுக்கி மறைத்துவிட்டனர் அது தப்பித் தவறி பாணர் முதலியோர் கையாறில் தவழ்ந்து தழைத்து வந்தது. யாழினல் பெருமை பெற்றது யாழ்ப்பாணம்.

பிற்காலத்தில் யாழ் வழங்கிய இடத்தில் வயலின் வாத்தியம் இடம் வகித்துக்கொண்டது அந்தக்காலத்தில் யாழ்ப்பாணத்தில் வயலின் வித்தகர்களுள் பரமேஸ்வர ஐயர் ஒருவர் தலையாயவர் என்றும் கூறலாம் அவர் சைவாசிரிய கலாசாலையில் இசையாசிரியரானர்.

சைவம் வளர்க்கும் மன்றங்களாயினும் சபைகளாயினும் விழாக்களாயினும் சைவப் பெரியார் புலோலி சு. சிவபாதசுந்தரம் அவர்களை அறியாமல் இயங்குதலரிது சிவபாதசுந்தரம் அவர்கள் தமிழ்நாட்டுச் சைவாதீனங்கள் மடங்கள் எங்கும் புகழ்பெற்றவர் நாவலரடிச் சுவட்டில் சைவத்தைப் பேணிவந்தவர். பரமேஸ்வராக்கல்லூரி, விக்ரோறியாக் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி முதலான கல்வித்தாபனங்களில் தலைமை தாங்கியவர். சேர் இராமநாதன் அவர்கள் பேரபிமானத்துக்கு இலக்கானவர். பழுத்த ஆசிரியர். அகநூல், உளநூல் முதலியன விரித்துக் கூறும் மனோதத்துவ நிபுணர். கற்பித்தலின் விதிமுறைகளில் அனுபவம் மிக்கவர். அரசாங்கம அறியப் பெரும்புகழ் பெற்றவர். சைவ வித்தியாவிருத்திச் சங்கத் தூணய்த் தோள் கொடுத்துத் தாங்கியவர். சைவாசிரிய கலாசாலையில் கௌரவமான முறையில் சைவம் கற்பிக்க மனமிசைந்து கொண்டிருந்தார். அலங்கரித்தார்.

நீராவியடியைச் சேர்ந்த கந்தவனம் ஐயாத்துரை என்பார் பழையகாலத்துத் தொழில் நுட்பக்கல்லூரியில் பயிற்றப்பெற்ற விஞ்ஞான ஆசிரியர். அவர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் சிலகாலம் விஞ்ஞானம் கற்பித்தபின் சட்டம் பயின்று நியாயதுரந்தரரானவர். நொத்தாரிசு வேலைபார்ப்பதற்காகப் பாலபண்டித பரீட்சை எடுத்துத் தம் தமிழறிவையும் வளர்த்துக் கொண்டவர். சைவவித்தியா விருத்திச் சங்கத்தின் தனதிகாரியாயும் இருந்தவர் அவர் தமது ஒய்வு நேரங்களில் சைவாசிரிய கலாசாலையில் விஞ்ஞானம் கற்பிப்பதற்கு சம்மதித்திருந்தார். அவர் யாழ்ப்பாண நகரசபையின் உறுப்பினராயும், தலைவராயும் இருந்தவர் அவரின் மைந்தருள் ஒருவர் கருணனந்தன் என்னும் கல்வித்துறை நிபுணர். இவர் விஞ்ஞானப் பட்டதாரியாய் கட்புல செவிப்புல கல்வி விரிவுரையாளராய். கல்வித்துறையில் கலாநிதிப்பட்டம் பெற்றவராய், யாழ்வளாகத்துக் கல்வித்துறை தலைவராயுமிருந்தவர்.

(தொடரும்)

## யேசுநாதர்

...3ஆம் பக்கத்தொடர்ச்சி

ுலான வெள்ளைத் தொப்பியும், சிவப்பும் வெள்ளையும் கலந்த கம்பளிக் கோட்டும், பாண்ட்டும் காலுறையும் அணிந்து தோளில் தொங்கும் பெரிய 'ஜோல்ஞ' பையில் பரிசுப்பொருட்களைத் தாங்கி வரும் ஒரு தாத்தாவின் உருவம்தான்!

ஆலயங்களிலும் விற்பனை நிலையங்களிலும் தனியார் நிறுவனங்கள் வழங்கும் கிறிஸ்மஸ் கொண்டாட்டங்களிலும் கிறிஸ்மஸ் தாத்தா அன்றைய நாயகனக விளங்குகிறுர்.

ரோமாபுரியிலுள்ள தேவாலயமொன்றில் 'நீக்கலஸ்' பாதிரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார். அவர் கிறிஸ்மஸ் பண்டிகைக் காலத்தில் பரிசில்களைச் சேகரித்துசிறுர்களுக்கு வழங்கி வருவது வழக்கம் வெள்ளைக் குதிரையிலேநீண்ட அங்கியணிந்து கரோல் கீதங்கள் இசைத்து வந்து சிறுர்களுக்கு பரிசில்கள் வழங்குவார். இந்த 'நீக்கலஸ்' பாதிரியார் நாளடைவில் பெயர் மருவி 'சாந்த நீக்கலஸ்'' என்ருகியது. அவரது மறைவின் பின்னரும் இதன் தொடர்ச்சி 'சாந்த குளோஸ்' ஆக மாறியது.

இந்தப் பாரம்பரிய வழக்கத்தை இன்றும் கிறிஸ்தவர்கள், சிறுர்கள் மத்தியில் கடைப்பிடித்து பரிசில்கள் வழங்கி வருகின்றனர் கரோல் கீதங்கள் இசைக்கும் குழந்தைகளுக்கும் கிறிஸ்மஸ் தாத்தா தலைமைதாங்கத் தயங்குவதில்லை. ஆண்டாண்டு தோறும் தோன்றி மறையும் கிறிஸ்மஸ் தாத்தாவின் புகழ் என்றும் மங்காமலிருந்து வருவதும் 'நீக்கலஸ்' பாதிரியாருக்கும் பெருமை தேடித்தருவதாக அமைகின்றது.

## கிறிஸ்மஸ் பண்டிகை

கிறிஸ்மஸ் பண்டிகையன்று புத்தாடை உடுத்தி ஆலயத்திற்குச் சென்று வழிபாடு நல்வாழ்த்துக்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்வது கிறிஸ்தவ குடும்பங்களில் இன்றைக்கும் நடைமுறையில் இருந்துவரும் பழக்கமாகும்.

பிரிட்டிஷ் மக்கள் கிறிஸ்மஸ் பண்டிகைக் காலங்களில் முதியோர் இல்லங்களில் வாழும் முதியவர்களுக்கு உதவி செய்வதையும், அகதிகள் பராமரிப்பு இல்லங்களில் வாழ்பவர்களுககு உதவி செய்வதையும், மருத்துவ மனைகளுக்கு உதவிசெய்வதையும் வழக்கமாகக் கொண்டிருக்கிறுர்கள். இப்பண்டிகையின் போது உதவி செய்வதையே அவர்கள் கருத்திற்கொண்டு செயற்படுகின்றுர்கள்.

இன்றும் பலர் விடுதிகளில் தங்கியிருக்கும் மாணவர்களை அழைத்து அவர்களுக்கு உணவும் பரிசில்களும் கொடுக்கிறுர்கள். அநாதைகள் இல்லங்களுக்கு சென்று புதுஉடைகளையும், பரிசில்களையும் அநாதைச் சிறுவர்களுக்குக் கொடுத்து மகிழ்விககின்றுர்கள்.

## தொழில்

...12ஆம் பக்கத் தொடர்ச்சி

அனுதரவாக நான்விட்டுவிட்டு வேலை பார்க்கிறேனு? என்றெல்லாம் நானே என்னைக் கேட்டுக் கொள்கிறேன்'' இது சித்தினஹும் பெண்ணின் குரல். ஓர் உல்லாசப் பயண ஹோட்டலில் பொதுஜனத் தொடர்பு அதிகாரியாக அவர் பணிபுரிகிறுர்.

தனியார் துறையில் ஒரு விற்பனை நிருவாக தரத்திலுள்ள தீப்தி. அவர் சொல்வதைக் கேட்போம்! ''அடிப்படையில் நான் ஓர் இல்லத்தரசி அதற்கு அடுத்தபடியாகத்தான் ஓர் அலுவலக நிருவாகி அலுவலக வேலை காரணமாக நான் விரும்பும் எத்தனையோ துறைகளில் ஈடுபாட்டைக் குறைத்துக் கொள்ளும் நிர்ப்பந்தம் எனக்கு ஏற்பட்டது. விட்டை அழகுறப் பேணி வைத்திருத்தல், சமைத்தல், பிரயாணங்களில் ஈடுபடுதல் முதலாயின அவற்றிற் சில ஆயினும்ஒன்று பிள்ளை வளர்ப்புப் பொறுக்க வரையில் இந்த 'ஜம்பம் எதுவும் அங்கே சாயாது! அதில் ஒரு இம்மியளவைக்கூட நான் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை'' என திர்க்கமாகச் சொல்கிறுர் தீப்தி.

பிரயாண ஒழுங்குகளை ஒழுங்கமைத்து உதவும் கம்பனி ஒன்றில் நிருவாகியாகப் பணியாற்றுபவர் சுரேஷ் அவரது மனைவியும் வேலை பார்க்கிறுர். குழந்தைகளும் அவர்களுக்கு உண்டு 'அலுவலகம் விட்டு மீண்டதும் நாம் எவ்வளவு சோர்வு அடைந்து களைத்துப் போயிருந்தாலும், எம் இருவரதும் நேரத்தில் பெரும்பங்கு எம் குழந்தைகளுக்கே'' என்கிறுர் சுரேஷ்.

குடும்ப வாழ்க்கை, வேலைத்தல வாழ்க்கை ஆகிய இரண்டிற்கும் இடையே வெற்றிகரமாக ஒருசமநிலை பேணிவரும் மங்கையரிற் பெரும்பாலானவர்கள், வாழ்வின் பல்வேறு அம்சங்களுக்கு முதன்மை வழங்கி நடத்து வருகின்றமையைக் காணலாம்.

## நாவலர் கண்ட...

6ஆம் பக்கத்தொடர்ச்சி

சமுத்திரமாகிய சிவன், ஆன்மாக்களுக்கு உலகத்துப் பொருள்களுள் மனைவியினும் இனிய பொருள் பிறிது இல்லாமையால், சிவனடியார் வேடங்கொண்டுவந்து, இவரிடத்தே இவர் கற்பினிற் சிறந்து விளங்கும் அம் மனைவியையும் மாறுது பெருமகிழ்ச்சியோடு கொடுத்தார். இதனுல், இவர் 'பனிமலர்க் குழற்பாவை நல்லாரிலும்' சிவனே தமக்கு இனியர் என்று கொண்டார் என்பது துணியப்படும். அன்றியும் இவர் உயர் குடிப்பிறப்பினுலும் பெருஞ் செல்வத்தினுலும் உலகத்தாராலே நன்கு மதிக்கப்படுவோராய் இருந்தும், தாம் பிறருக்கு மனைவியைக் கொடுப்பின் உலகத்தாராலே பழிப்புரை உண்டாகுமென்பது நோக்கிற்றிலர். இதனுல் இவர் மனத்தைச் சிவபக்தியே விழுங்கிற்றென்று துணிக இவர்'நாடவர் பழித்துரை பூணதுவாகக்' கொண்டமையும் தேர்க.

## இஸ்ரேல்...

... 9 ஆம் பக்கத் தொடர்ச்சி

பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையே நடைபெற்ற இம் முதலாவது பேச்சுவார்த்தை சுமார் முக்கால் மணிநேரம் நடைபெற்றது. பி. எல். ஓ.வின் மத்திய குழு உறுப்பினர்கள் மூன்று பேர் இப்பேச்சில் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது.

இப் பேச்சு வார்த்தைகள் பயனுள்ளதாகவும் மேலும் தொடரக்கூடியதாகவும் இருந்ததாக இரண்டு தரப்பினரும் தெரிவித்தனர் ஆனுல் 'பயங்கரவாதம்' என்ருல் என்ன என்பதற்கான வரைவிலக்கணம் ஒன்றை ஏற்படுத்துவதில் இருதரப்பினரிடையேயும் ஒற்றுமை ஏற்படவில்லை என சில செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளையில் இஸ்ரேலின் ராணுவத் தளங்கள் மீதான தமது தாக்குதல் தேவைப்பட்டால் தொடருமென யாஸிர் அரபாத் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். அதே போல, அரபாத்தின் ஐ.நா சபை உரையை நுணுகி ஆராய்ந்து பார்த்திருந்தால் அமெரிக்கா பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வந்திருக்காது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

எனினும் பலஸ்தீன விடுதலை இயக்கம் உண்மையாகவே வன்முறைகளைக் கைவிடுமென்ருல் அதனுடன் பேசிப் பிரச்சனையைத் தீர்க்கத் தாம் தயாராக இருப்பதாக இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் சிமொன் பெரஸ் பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். இதனைப் பார்க்கும் போது உலக நாடுகளின் நெருக்குதல்களாலும், சர்வதேச சமூகத்திலிருந்து ஒதுக்கப்படாமல் தப்புவதற்காகவும் பலஸ்தீன விடுதலை இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய அவசியம் இஸ்ரேலுக்கு ஏற்பட்டு வருவது தெரிகின்றது.

இவ்வளவு காலமும் இஸ்ரேல் என்ருெரு நாடு இருப்பதை ஏற்றுக் கொள்ளாமல் ''இஸ்ரேல்'' என்ற சொல்லை வாயில் கூடச் சொல்லாமல் இருந்த யாஸிர் அரபாத் இஸ்ரேலைஅங்கீகரித்ததன் மூலமாகவே இன்றைய ராஜதந்திர வெற்றியையும் உலக நாடுகளின் அங்கீகாரத்தையும் பெற்றிருக்கின்றுர். அதே போல, 'பலஸ்தீனம்' என்ருெரு நாடு இருப்பதற்கான உரிமையை அங்கீகரிக்காது விட்டால் சர்வதேச சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கப்படுவதை இஸ்ரேலால் தடுக்க முடியாத நிலையே ஏற்படும்.

இவவாறுன நிலை ஏற்படுவதைத் தடுப்பதற்காக அமெரிக்காவும், இஸ்ரேலும் பல முயற்சிகளை மேற்கொள்ளலாம். ஆனுல் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் சிறந்த ராஜதந்திரத்தின் மூலமாக மட்டுமே இன்றைய நிலையில் அமெரிக்காவையும், இஸ்ரேலையும் வெற்றிகொள்ள முடியும்.

## புதுபெரும் . . .

...7 ஆம் பக்கத் தொடர்ச்சி

தற்காக இங்கிலாந்தில் இருந்து சாதனங்கள் தருவிக்கப்பட்டன. முன்னர் கிருமி நீக்கம் செய்வதற்காக பயன்பட்ட இட்டலிப்பானை தனது பணியிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டது.

அக்காலத்தில் மக்கள் பெரியாசுப்பத்திரிக்கு செல்வது குறைவு. மூளாய் வைத்தியசாலையில் வசதிகள் அதிகரித்தமையால் வெளியிடங்களில் இருந்தும் நோயாளர் பெருமளவு வரத் தொடங்கினர்கள். பருத்தித்துறையில் இருந்து இரண்டு பஸ்கள் வைத்தியசாலைக்கு நோயாளரை ஏற்றி வருவதற்காக விடப்பட்டன. காலை ஏழு மணிக்கெல்லாம் எண்பது பேருக்குமேல் நம்பர் கொடுத்து முடித்திருப்போம்.

எனக்கும் அங்கு வேலை பார்த்த எல்லா ஊழியர்களுக்கும் ஊதியம் அதிகரிக்கப்பட்டது இது அரசாங்க ஊதியத்திலும் பார்க்க குறைவாக இருந்தபோதும் வாழ்க்கைச் செலவுக்கு போதுமானதாக இருந்தது. மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை நிர்வாகிகள் எனக்கு மூவாயிரம் ரூபா வரை சம்பளம் தருவதாக கூறினுர்கள் ஆனுல் நான் மறுத்து விட்டேன் 1975 ஆம் ஆண்டு கண்ணில் ஏற்பட்ட சுகவீனத்தால் மூளாய் வைத்தியசாலையை விட்டு விலகினேன். அப்போது நான் பெற்ற சம்பளம் ஆயிரம் ரூபாவகும்.

## சம்பந்தன் வைத்திய நிலையம்

சம்பந்தன் வைத்தியசாலை என்ற பெயரில் யாழ்ப்பாணத்தில் இரண்டு வைத்திய நிலையங்கள் இயங்குகின்றன. இவற்றில் ஒன்றில் தான் நான் மூளாயை விட்டு விலகியபின் கடமையாற்றினேன். ஆனுல் தற்போது இவற்றிற்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.


# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சட்டத்தரணி

**வெற்றிவேலு செல்லத்துரை**

(ஐயக்கோன்) அவர்கள்

மண்ணில்: 20-01-1907 விண்ணில்: 25-12-1986

எங்கள் அன்புத் தந்தையே!

தாங்கள் சிவகதி சேர்ந்து ஈராண்டு ஓடி மறைந்து விட்டது. தங்கள்மீது கொண்ட பக்தியை நாம் என்றும் மறவோம்.

தங்கள் ஆத்ம சாந்தியின் பொருட்டு நாம் அனைவரும் இறைவன் திருவடிகளை இறைஞ்சுகின்றேம்.

உங்கள் பிரிவால் துயருறும்

யாழ்ப்பாணம். பிள்ளைகள்.

12455



குவைற் நாட்டில்

**வேலைவாய்ப்பு**

**Kuwait 300 Cleaners 35 K D**

(ஆண்கள் மட்டும்) NO FOOD

வயதெல்லை 18 — 48 வரை

05-02-1989-ல் தான் பிரயாணம் செய்யலாம்.

**பெய்ரூட் - லெபனுன்**

உடனடி வேலை வாய்ப்பு

100 தொழிலாளர்கள் 100 USD

இரண்டு கிழமையினுள் பயணம் ஒழுங்கு செய்யப்படும்

**சவூதி அரேபியா**

உடனடி வேலை வாய்ப்பு

04 பேர் தச்சுத் தொழிலாளர்கள் 650 SR

04 பேர் மேசன் தொழிலாளர்கள் 650 SR

02 பேர் ஏயர் கொண்டிசன் மெக்கானிக் 700 SR

வயதெல்லை 21—48 வரை

300 கிளீனர்ஸ் 400 S R

(ஆண்கள் மட்டும்)

60 கனரகச் சாரதிகள் 600 SR

வயதெல்லை 21 — 48 வரை

● Canada - கனடா ● ஜேர்மனி

ஆகிய நாடுகட்கு எமது ஸ்தாபனத்தால் விசா, விமானச் சீட்டு ஒழுங்கு செய்து தரப்படும் நேர்முகப் பரீட்சைக்கு உயர் ஸ்தானிகராலயம் சென்று நேரில் விசாப் பெற்று அனுப்பிவைக்கப்படுவர்.

முக்கிய குறிப்பு

பத்து நாட்களில் கனடாவிற்கு விசா ஒழுங்கு செய்து அனுப்பிவைக்கப்படுவர். கடவுச்சீட்டு (All Countries) மூன்று (03) போட்டோக்களுடன் (பாஸ்போட் சைஸ்) நேரில் உடன் தொடர்பு கொள்ளவும். ஜேர்மனிக்கு 20 வயதிற்குட்பட்டவர்களுக்கு மாத்திரம் பிரயாண ஒழுங்குகள் செய்து தரப்படும்.

உடன் தொடர்பு கொள்ளவும்:-

**T. V. Travels & Tourist**

Railway Station (Front).

Brown Road, Kokuvil.

12840

சிறந்த முறையில்
வீடியோ படம் பிடித்திட
வீடியோ விகோன்ஸ்
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள்
கோயிலுக்கும் இடையில்)
353 C, மணிக்கூட்டு வீதி

வார முரசொலி
VARAMURASOLI

For Quality Video Filming
Video Vihons
353 C. Clock Tower Road,
★ Wellington Junction.

★ ஈ.பி ஆர்.எல்.எப். செயலதிபர் பத்மநாபா அறிவிப்பு

# தொழிலாளர் நலன்பேண மாகாண அரசின் ஊடாக நடவடிக்கை எடுப்போம்

''தொழிலாளர்கள் நலன்கருதி உருவாக்கப்பட்ட பல சட்டங்கள் ஏட்டளவில் இருந்த போதிலும், யாழ் மாவட்டத்தைப் பொறுத்தவரை வர்த்தகத்துறையைச் சார்ந்த சிப்பந்திகள் மிகக்கொடூரமாக சுரண்டப்படுவதும். குறைந்த சம்பளத்தில் கூடிய நேரவேலை வழங்கப்படுவதுமான சூழ்நிலையில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர்'' என்று ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் திரு. க. பத்மநாபா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் இங்குள்ள வர்த்தக நிறுவனங்களின் உரிமையாளர்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

இப்பகுதிகளிலுள்ள வர்த்தக ஸ்தாபனங்களில் வேலை செய்யும் சிப்பந்திகளுக்குச் சம்பள நிர்ணய சபையால் வழங்கப்படும் சம்பள நிர்ணயத்தின் அடிப்படையில் சம்பளம் வழங்கப்படுவதுடன். அங்கீகரிக்கப்பட்ட நேர வேலையும், மேலதிக நேர வேலைக்கு மேலதிக சம்பளம், ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை, ஏனைய விடுமுறை நாட்களில் வேலை செய்யும் பட்சத்தில் மேலதிக சம்பளம் ஆகியன வழங்கப்படுதல் வேண்டும். அத்தியாவசிய தேவைகளான மருந்துக்கடை, உணவு விடுதிகள், தேநீர்க் கடைகள் என்பன விடுமுறை நாட்களிலும் திறக்கப்பட வேண்டிய அவசியமிருப்பதால் அவற்றிற் தொழில் செய்யும் தொழிலாளர்களுக்கும். சிப்பந்திகளுக்கும் நேரம் கணக்கிட்டு மேலதிகமாக விசேட சம்பளத்துடன் கூடிய விடுமுறை நாடகளும், மேலதிக கொடுப்பனவுகளும் வழங்கப்படுதல் அவசியம்.

ஆகவே யாழ். மாவட்டத்திலுள்ள சகல தொழிலாளர்களினதும் அடிப்படை உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கவும், வர்த்தக சிப்பந்திகளின் சட்டபூர்வமான உரிமைகள் அவர்களைச் சென்றடையவும் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வடகிழக்குமாகாண அரசின் மூலம் கடுமையான நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளது ஆகவே தொழிலாளர்களும், வர்த்தகச் சிப்பந்திகளும், ஏனைய துறைகளைச் சேர்ந்த ஊழியர்களும், உதிரிகளாகத் தொடர்ந்தும் செயற்படாது தமது தொழில் துறையைச் சேர்ந்த சகலரையும் ஓரணியின்கீழ் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். உழைப்பையும் ஊதியத்தையும் சுரண்டுவதற்கு இன, மத, மொழி ஒற்றுமையைகூட முதலாளித்துவம் பாவிக்கத் தயங்காதென்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும் இன உணர்வுகளையும், விடுதலை உணர்வுகளையும் முதலாளிகள் தமது சுரண்டலுக்கு நல்ல அடிப்படையாக பயன்படுத்துவதை இன்று நிதர்சனமாகக் காண முடிகின்றது.

ஆகவே, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரை என்றும் தொழிலாளர் விவசாயிகளின் பக்கம் நின்று உறுதியுடன் போராடும் என்பதை இச் சந்தர்ப்பததில் மீண்டும வலியுறுத்துவதோடு, வர்த்தக சங்கங்களும், தனியார் துறை முதலாளிகளும், கம்பனி இயக்குநர்களும் தம்மால் இணைககப்பட்டுள்ள தொழிலாளர்களின் அடிப்படை நலன்களை அங்கீகரித்து தொழிலுக்கான பாதுகாபபை உறுதிப்படுத்திச் செயற்பட முன்வர வேண்டுமென வேண்டுகின்றோம்.

## கம்யூனிஸ்ட் தமிழ்நாடு பிரிவு ஜெயலலிதா அணியுடன் கூட்டு

கடந்த வாரம் தமிழ்நாடு திராவிட முன்னேற்றக் கட்சியுடனான தனது ஏழு ஆண்டு உறவுகளை துண்டித்துக் கொண்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு பிரிவு அ. இ. அ.தி.மு. க. ஜெயலலிதா அணியுடன் தேர்தல் கூட்டை ஏற்படுத்தியுள்ளது. என்று கட்சியின் தமிழ்நாடு பிரிவுத் தலைவர் திரு. மாணிக்கம் தெரிவித்துள்ளார் ஜனதா கட்சியின் விஜயராகவன் பிரிவினருக்கு அடுத்தபடியாக ஜெயலலிதா கட்சியுடன் இணைந்த இரண்டாவது கட்சி இதுவாகும்.

அ. தி. மு. கவின் ஜெயலலிதா அணியின் 52 வேட்பாளர்களைகொண்ட இரண்டாவது பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. தேர்தல் உடன்பாடு கண்டுள்ள கம்யூனிஸ்ட் கட்சிககு பதினொரு இடங்கள் ஒதுக்கபபடும் என அதல தெரிவிககபபட்டுள்ளது

தமிழ்நாடு காங்கிரஸ் ''ஐ'' கட்சி நூற்றிதொண்ணூறறி ஐந்து வேட்பாளர்களைக் கொண்ட முதலாவது பட்டியலை நேற்று வெளியிட்டது. தமிழ்நாடு காங்கிரஸ் 'ஐ'' கட்சி பதின்நான்கு தொகுதிகளை தனது தோழமைக கட்சிகளுக்கு விட்டுக்கொடுததருக்கிறது. பதினைந்து பேர் அடங்கிய இரண்டாவது பட்டியல் விரைவில் வெளியிடப்படும் எனவும் அதில் ஏதாவது ஒரு தொகுதியில் திரு மூப்பனார் போட்டியிடுவார் எனவும் காங்கிரஸ் ''ஐ'' கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

### நகரில் இரு...

கும். இத்தீயை அணைப்பதற்கு நேற்று அதிகாலை அமைதிப் படையினர் முயற்சியெடுத்தனர். அதன் பின்னர் காலை யாழ். மாநகர தீயணைப்பு சேவையினர் அழைக்கப்பட்டனர்.

காலையில் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. எனினும் இருகடைகளிலும் இருந்த பலலட்சம் ரூபா பெறுமதியான பிடவைகள் முற்றுகளரிந்து நாசமாகியுள்ளன.

### சைக்கிள களவா...

யின் போது இருபதுக்கும் மேற்பட்ட சைககிளகளை தாம் திருடியதாக இவர்கள் ஒப்புக் கொண்டனா. இதன் பின் இவர்கள் இருவரும ஸ்ரான்லி வீதியில இலங்கை வங்கிக்கு முனபாக உள்ள மின கம்பததில பொதுமக்களின் பார்வைக்காக கட்டிவைக்கபபட்டிருந்தனர்.

சில மணி நேரத்தின் பின்

### கொள்ளை முயற்சி

கட்டப்பிராய் குழுக்கட்டு ஒழுங்கையில் கடந்த வியாழக் கிழமை இரவு ஏழரை மணியளவில் கொள்ளையிட முயன்ற சிலரை அப்பகுதி மககள் தகரங்களை அடித்தும் கூச்சலிட்டும் விரட்டினர். கொள்ளையர்கள் சில விடுகளுக்கு முன்னால் இருளில் பதுங்குவதைக் கண்டு வீடுகளில் உளளவர்கள சததமிட்டதால் அவர்கள் விரட்டப்பட்டனர்.

இவர்களில் ஒருவரின் சடலம் யாழ். வெலிங்டன் தியேட்டருககு அருகில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணபபட்டது. இறந்தவர் கொழும்புத் துறையைச் சேர்ந்த அகஸ்ரின ஜெயசீலன் (25) எனத் தெரிவிககப்படுகின்றது.

## அடகுநகைக்கான வட்டியை ரத்துச்செய்ய கோரிக்கை

யாழ். மாவட்டத்தில் மக்கள் வங்கிகளில் அடகுவைத்த நகைகளை கொழும்புக்கு கொண்டு சென்ற தினத்தின் பின்னர், அதற்கு வட்டி அறவிடப்படாமல் மீளளிக்க வேண்டும் என்று புதிய ஜனாதிபதி ஆர். பிரேமதாஸவைக் கோரும் தீர்மானம் நேற்று நடைபெற்ற அடகு வைத்தோர் சங்கத்தில் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின் போது பிரதமர் உணவு முத்திரை பெறும் ஏழைகளுக்கு மாதாந்தம் இரண்டாயிரத்து ஐந்நூறு ரூபா வழங்கி அவர்களுக்கு இரண்டு வருட முடிவில் சுயதொழில் வாய்ப்பு அளிக்கும் திட்டமொன்றை வகுத்துள்ளதால், ஏழை மக்கள் சுயதொழிலுக்காக அடகுவைத்த நகைகளை மீட்பதற்கு கொழும்புக்குக் கொண்டு சென்ற காலம் முதல் வட்டி அறவிடுவதை ரத்துச்செய்யவேண்டும் என்று அத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது

## மரீனா கடற்கரையருகில் எம். ஜி. ஆர். நினைவுச்சின்னம்

(சென்னை)

மறைந்த தமிழக முதல்வர் எம். ஜி. இராமச்சந்திரனின் முதலாவது நினைவு தினம் நேற்று தமிழகத்தில் கொண்டாடப்பட்டது

சென்னை மரீனா கடற்கரையிலுள்ள அன்னாரின் சமாதிக்கு தமிழக ஆளுநர் திரு. பி. சி. அலெக்ஸாண்டர், திருமதி ஜானகி இராமச்சந்திரன், இரா. நெடுஞ்செழியன், செல்வி ஜெயலலிதா உட்பட அ. தி மு. க. உறுப்பினர்கள் முன்னாள் அமைச்சர்கள் ஆகியோர் வெவ்வேறு நேரங்களில மலர் அஞ்சலி செலுத்தினர்.

இதேவேளை இருபத்திரண்டு லட்சம் ரூபா செலவில் மரீனா கடற்கரையில் எம் ஜி ஆர். நினைவுச்சின்னம் ஒன்றும் அமைக்கப்படவுள்ளது இதற்கான அடிக்கல்லை தமிழக ஆளுநர் நேற்று நாட்டினார்.

## யேசுநாதர் பிறந்த நகரில் நேற்று கறுப்பு நத்தார் தினம்

(ஜெருசலேம்)

யேசுகிறிஸ்து நாதர் பிறந்த பெத்தலஹேம் நகரில் நேற்று இரவு கறுப்பு நத்தார் கொண்டாடப்பட்டது.

கடந்த வருடம் இஸ்ரேலியர்களால் கொல்லப்பட்ட 320 பலஸ்தீனியர்களின் நினைவாக இம்முறை நத்தார் தினம் கொண்டாடுவது இல்லை என்று பலஸ்தீனம் ஏற்கனவே அறிவித்திருந்தது

நேற்று பலஸ்தீனியர்கள் வாழும் பகுதியிலும், பெத்தலஹேம் பகுதியிலும் கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன. வழமையாக நடைபெறும் வருடாந்த கொண்டாட்டங்கள் எதுவும் இம்முறை நடைபெறவில்லை.

### வீதியில் சடலம்

(பருத்தித்துறை)

பருத்திததுறையில் இளைப்பாறிய பொலிஸ் சார்ஜன்ட் சபாநாயகம் (வயது 62) இனந்தெரியாத இளைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9-00 மணியளவில துன்பளையிலுள்ள அவரது வீட்டிற்கு வந்த இனந்தெரியாத கோஷ்டியொன்று அவரை அழைததுச் சென்றதாகவும் மறுநாள் அதிகாலை அவர் பருததித்துறை வடபிராந்திய போக்குவரத்துச்சபைசாலைக்கு அருகாமையில் வீதியோரத்தில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்ததாகச் சிலர் வந்து கூறியதாகவும் இறந்தவரது மனைவி தெரிவித்தார்

### காவலர் காயம்

மேல் மாகாண சபையின் உணவு கூட்டுறவுத்துறை; கைத்தொழில் அமைச்சர் ஜனாப் ஏ எம் யூசுப் அவர்களின் இல்லத்தில் ஜே வி பி. இயக்கம் மேற்கொண்ட தாக்குதலில் அமைச்சரின் மெய்ப்பாதுகாவலர் காயமடைந்தார். இச் சம்பவத்தில் அமைச்சர் யூசுப் மயிரிழையில் உயிர் தப்பினார்.

### யாழ் மினபகுதி ..

மாககப்பட்டுள்ள மின் கோபுரங்களைத் திருத்தும் பணியில அனுராதபுரததைச் சேர்நத ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். இதனாலேயே மதவாச்சியில் திருத்தவேலையை மேற்கொள்வதற்கு யாழ்ப்பாணத்திலிருந்து ஊழியர்கள் அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது

யாழ்ப்பாணத்திற்கு நீர்மின் சாரம் மீண்டும் கிடைக்கும வரை சுன்னாகம் மின்சாரசபை ஜெனரேட்டர், காங்கேசன் துறை லங்கா சிமெந்து நிறுவன ஜெனரேட்டர் எனபவற்றின் மூலம் சுழற்சி முறையிலான மின் விநியோகம் தொடர்ந்தும் வழங்கப்படும் என மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

### ஐக்கிய தேசியக கட்சி ..

தலைமையிலான எட்டுக் கட்சிகள் கூட்டணியிலிருந்து விலகி, ஜனாதிபதி தேர்தலில ஸ்ரீமாவோவை எதிர்த்துப் பிரசாரம் செய்தவை எனபது குறிப்பிடத்தக்கது.

திரு. ருகமன் சேனநாயக்கா முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்காவின் மூத்த சகோதரரின் புதல்வராவார். இவர் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக கட்சித் தலைமைக காலத்தில் கட்சியிலிருந்து விலத்தப்பட்டவர் என்பதும் குறிபபிடத்தக்கது.

கிழககு மாகாணத்தின முஸ்லிம் தொகுதிகளை முஸ்லிம் காங்கிரஸுக்கு விட்டுக் கொடுக்க பிரேமதாஸ சம்மதிக்கலாமென்றும் தெரியவந்துள்ளது

இப் பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதி, 62ஏ. இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 25 2.88 ல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது